Mrh. 1914. | உ | Reg. No. M. 1080.

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

TAMILIAN.

A Monthly Tamil Journal.

Pandit, S. Muthuswami Pillai, Managing Editor.

Vol. II. | 1089 மாசி | No. 6.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	மாதசரிதம்	161
2.	மானிடப் பிறவியின் மாட்சி.	162
3.	கல்வி.	164
4.	ஸ்ரீஇராமலிங்கசுவாமிகளுடைய ஜீவகாருணிய போதனைகள்.	169
5.	தண்ணீர்.	173
6.	ஓர் மஹரிஷியின் உபதேசங்கள்	177
7.	தற்கால இந்துக்கள்.	179
8.	தேக ஆராய்ச்சி.	183
9.	சமாசாரத்திரட்டு	186

Printed at the 'BHASKARA' PRESS, and
Published by S. Muthuswamy Pillai, Trivandrum.

அனேக தங்கமெடல்களும் வெள்ளிமெடல்களும்

பெற்ற டாக்டரா H. L. பட்லிவாலாவின்,

உலகப்பிரசித்தமான மருந்துகள்.

Ague mixture or Pills:—மலைசுரம், குளிர் சுரம் முதலிய எவ்வகை சுரங்களுக்கும் கைகண்ட மருந்து விலை ரூ ௧.

Haretone:—நரைமயிர் கறுக்க திவ்யமான மருந்து விலை ரூ ௫.

Toinc Pills:—நரம்புத்தளர்ச்சி, பலக்ஷயம் முதலியவற்றை நீக்கி ஆச்சரியப்படத்தக்க தேகபலத்தை உண்டு பண்ணும் குளிகைகள். விலை ரூபா ௧இ.

Tooth Powder:—பற்பொடி. நாட்டு மூலிகைகளாலும் இங்கிலீஷ் மருந்துகளாலும் செய்யப்பட்டது. வாய்நாற்றம் பற்புழு பற்கட்டு முதலியவைகளைத் திட்டமாய்க் கண்டிக்கும் விலை அணா ௪.
பெரிய பொட்டணம் அணா ௮.

Ring worm Ointment:—புழு வெட்டுக்கு மகத்தான மருந்து ஒரே நாளையில் சொஸ்தப்படுத்தும். விலை அணா ௪.

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு இங்கிலீஷில் எழுதி வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

Dr. H. L. Batliwalla's co,
Warli Labaratory, Dadar. Bombay.

சந்தாவிவரம்.

	ரூ	அ	பை.
போஷகர்களுக்கு	4	0	0
சந்தாதார்க்கு	2	0	0
பினாங்கு சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு	3	0	

குறிப்பு, (1) முதல் ஆறு மாதங்களுக்குள் ஒரு வருஷ சந்தா முன்னதாகச்செலுத்தும் சந்தாதார்க்கும் போஷகர்களுக்கும் 8 அணா விலையுள்ள "கற்பகவல்லி" என்னும் நாவல் ஒரு பிரதி இனமாகக்கொடுக்கப்படும்.

(2) அடுத்தஜனவரி மாதம் முதல் மாணவர்களுக்குப் போட்டி உபந்யாசங்கள் கொடுக்கப்படும்.

Pandit S. Muthuswami Pillai.
Managing Editor.
The "TAMILIAN"
Trivandrum.

உ

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு"—குறள்.

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை. பத்திராதிபர்.

தொகுதி II	1089. மாசி மீ	பகுதி VI

மாதசரிதம்.

ஆறுவது மாதத்தோடு நமது பத்திரிகை குறித்தகாலத்தில் வெளிவரும் தன்மையைப் பெற்றது. சொந்தமாக அச்சுக்கூடம் இல்லாத பத்திராதிபர்களுக்குப் பிரசுரசம்மந்தமாக இத்தகைய தவறுதல்கள் உண்டாதல் இயல்பே. இஃது பத்திரிகை வாசிப்போருக்கெல்லாம் அநுபவமான விஷயம். இம்மாதத்தோடு அக்குறைபாடும் நீங்கிற்று.

நமது போஷகர்களுக்கும் சந்தாநேயர்களுக்கும் தெரிவிக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. நான் ஏராளமான கைம்முதலோடு பத்திரிகை நடத்தும் பத்திராதிபரல்ல. ஸ்ரீமாந் பெத்தாச்சி செட்டியாரவர்கள் தருவதாக வாக்களித்த பவுன் 10-ம் தந்தாய்விட்டது. இனிமேல் போஷகர்களும் சந்தாதாரும் செய்யும் பொருளுதவியாலே பத்திரிகை செவ்வையாக நடைபெற வேண்டியதாக இருக்கிறது. தமிழுலகத்தின் அடிமையாக இருந்து உழைப்பதற்கு மட்டுமே நான் சக்தியுடையவன். "தமிழனை" ஆதரிக்கும்பொறுப்புத் தமிழுலகத்தாரைச் சேர்ந்தது. ஆதலின் நமது போஷகர்களும் சந்தாதார்களும் தங்கள் பொறுப்பையும் கடமையையும் நன்குணர்ந்து அவரவர்கள் செலுத்தவேண்டிய தொகையை காலதாமதமின்றிச்செலுத்தி என்னை ஆதரிப்பார்களென்று பூரணமாய் நம்புகின்றேன்.

இம்மாதத்திலும் தமிழன் ஒரு பெருதவியாளரைப் பெற்றிருக்கின்றான். தென்காசிக்கடுத்த சேந்தமறம் ஸ்ரீமாந் K. V. பிரான்சிஸ் சேவியர் என்பார் தமிழனை, சென்னையிலிருந்து வெளியாகும் "விவேகபோதினி", "பிழைக்கும்வழி" முதலிய உயர்தரப்பத்திரிகைகளுக்கு ஒப்பான நிலைமையில் கொண்டு வரவேண்டுமென்றும் அதற்கவசியமான உதவிகளெல்லாம் அவர்கள் செய்யத்தயாராயிருப்பதாகவும், உறுதிவாக்களித்திருக்கின்றனர். இத்தகைய உத்தமமான நல்லெண்ணம் நமது பத்திரிகாபிமானிகள் உள்ளத்தெல்லாம் உதிக்கச்செய்யுமாறு தெய்வத்திருவருளை வேண்டி இம்மாத சரித்திரத்தை முடிக்கின்றேன்.

பத்திராதிபர்.

மானிடப் பிறவியின் மாட்சி.

உலகம் பெரிது. அதில் உள்ள பொருள்களோ பலவகைப்பட்டன; அன்றியும் எண்ணிறந்தன. ஈ எறும்புகளை எண்பத்தினான் குலட்சம் சீவராசிகளுள்ளனவாக நமமுன்னோர் கூறிப்போந்தார். அஃது கேவலம் புனைமொழியென்று தள்ளிவிடுவதும் சாத்தியமல்ல. அறிவு முதிர முதிர அறியப்படாத சீவராசிகள் இன்னும் அநந்தம் உள்ளனவாக வெளியாகின்றது. இவ்வண்ணம் அளவிறந்தனவாகிய பிராணிகளை ஈசன் ஏன் படைத்தான்? "படைக்கின்றதீசன் திருவிளையாட்டே"யாயினும் அவ்விளையாட்டுக்கும் ஏதேனும் ஒரு நோக்கம் இருத்தல்வேண்டும். இன்றேல் ஞானஸ்வரூபியாகிய ஈசன் ஞானசூனியனாவான். ஐயோ! அது எண்ணத் தக்கதுமன்று. அங்ஙனம் கூறியநாவும் சுடும்; எண்ணிய இதயமும் எரியும். பின்னர் படைப்பின் பயன் யாதோ என ஆராயப்புகுமிடத்து,

"ஒவ்வோர் பொருளினும் ஒவ்வோர் நலத்தை உதிக்கவிட்டுச்
செவ்வே உலகம் செழிக்கச்செய்தான், பெருஞ்சித்துடையான்"
"எல்லாஉயிரும் சுகம்பெறல் ஈசன் எண்ணுமுடிவாய்
பல்லாயிரம்வழி அச்சுகம் எய்தப் பயிற்றுகின்றான்"

என்னும் ஆப்தவாக்கியங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. அதாவது இவ்வுலகத்துள்ள ஒவ்வொரு பொருளும் அததற்கியன்ற

மட்டும் சுகம் பெறவேண்டு மென்பது தேவகட்டளை. அக்கற்பனை முற்றுபெறும் பொருட்டே எல்லாப் பொருள்களும் படைக்கப் பட்டிருக்கின்றன. இதனால் நமது கட்புலனுக்கு எட்டாத சிறுபுழுவும் கூட சுகம்பெறவும் தன்னாலியன்றமட்டும் பிறவுயிருக்கு சுகம் விளைக்கவும் படைக்கப்பட்டிருப்பதாய்ப் பிரத்தியட்சமாகின்றது.

அற்பமான சிறுபுழுவும் இவ்வண்ணம் ஒரு மகத்தான உத்தேசத்தோடு சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றதாயின், பஞ்சபூதங்களையும் அண்டஜம், சுவேதஜம், சராயுஜம், யோனிஜம் ஆகிய நால்வகைத்தோற்றங்களையும் அடக்கியாளும் வலிமையும், ஸர்வ வியாபகனாய், ஸர்வஞானியாய், ஸச்சிதானந்தனாய் விளங்கும் பரம்பொருளின் திருவருட் பிரசாதம்பெறும், மகிமையும் உடைய மஹோந்நதமான மானிடப்பிறவியின் மாட்சியை என்னென்று இயம்புவது! உண்மையாகவே நாம் பெற்றிருக்கும் ஜென்மம் மேலானது; மிகவும் மஹத்தானது; மிகவும் சிரேஷ்டமானது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் தரத்தக்கது. இவ்வுண்மையை உய்த்துணராது, "ஐயோ! நான் ஏழை, நான் துர்ப்பலன், நான் வறியன்" என யாராவது பல்லைக்காட்டிப் பஞ்சப்பாட்டுப் பாடுவார்களானால் அவர்களைப்போல் முழுமூடர்கள் உலகத்திலில்லை. அவர்கள் பாடெல்லாம் கையில் வெண்ணெயைவைத்துக் கொண்டு நெய்க்கலைந்த புத்திசாலியின் கதையாகவே முடியும். ஆனால் மானிடப்பிறவியின் மகிமையை அறிபவர் மிகச் சொற்பம். ஒருக்கால் அறியினும் அம்மகிமையை அநுபவிக்கத் துணிவு கொள்வோர் தொகை அதனினும் சொற்பம். துணிவு கொள்ளினும் இறுதி வரையிலும் விடாதுழைத்துக் கைவல்லியப்படுத்துவோர் தொகை அதனினும் மிகச்சொற்பம்.

சர்வ வியாபகரான கடவுளுக்கு நாம் ஒரு சிறுதுரும்பினுங் கடையரேயாயினும் நாமும் இப் பிரபஞ்சத்தின் ஒரு சின்னஞ் சிறு பகுதியென்றும் அதன் வெற்றிக்காக நாமு முழைக்கக் கடமைப் பட்டிருக்கின்றோமென்றும் உணரல்வேண்டும். அவ் வுணர்ச்சியில்லாது உண்பதும் உறங்குவதுமே மானிடப்பிறவியின் நோக்கமென்றெண்ணிக்காலந்தள்ளுவோர் மனிதவேஷதாரிகளேயன்றி உண்மையில் மனிதர்களல்ல. ஈ எறும்பு, நாய், குரங்கு முதலிய அற்பசீவராசிகளும் உண்ணுகின்றன; உறங்குகின்றன. நாமும் அவைபோல் நாட்கழிப்பின் நமக்கும் அவைக்கும் பேதமென்னை? நாம் எந் நிலைமையிலிருப்பினும் ஒரு உயர்வான உத்தமநோக்கத்தோடு உழைத்தல் வேண்டும். அதனால் நமக்கு அநேக இடையூறுகள் உண்டாகக் கூடும். பற்பல பிரா

ணுபத்துகள் வரக்கூடும். அதனுல் என்னே? அவைக் கஞ்சிப் பின்னடைவோர் ஆண்மக்களாகார். வருந்திப்பெறும்பேறேமேலானபேறு. பெறுதற்கரியனவே பெறத்தக்கனவாம். அரியனவாகத் தோற்றுவனவும் எந்நாளும் அரியனவல்ல. உண்மையில் நம் நினைவுக்கெட்டுவன யாவும் பெறத்தக்கனவே. உண்மையான உழைப்பும் உறுதியான நெஞ்சமுமுடையோர்க்கு அரியனவு முளவோ? தவமகனுன மார்க்கண்டேயன் சிரஞ்சீவியாகவில்லையா? பகீரதனும் ஆகாசகங்கையைப் பெறவில்லையா? ஒகோ! அவை பழங்கதையெனத் தள்ளுவீர்களாயின், ஒரு சிறுகுடிசையிற் பிறந்து உலகிற் பாதியை ஒரு குடைக்கீழாக்கிய நெப்போளியன் சரிதைக்கு என்ன சொல்லுவீர்? காற்றினையும் கனலினையும் புனலினையும் அடக்கியாளும் வலிமைகொண்ட ஐரோப்பிய பண்டிதர்களின் மெய்ச்சரிதைக்கு என்னசொல்லுவீர்?

ஆகவே உண்மையில் அரியன ஒன்றுமேயில்லை. எல்லா உயிரும் சுகம்பெறல் ஈசன் முடிவாகலில் நம்மால் உலகத்துக்களிக்கக்கூடும் பெருஞ்சுகமெதுவோ அதற்கான நிமித்தங்களை ஆராய்ந்தறிந்து அவைகளை கைவல்லியப்படுத்த முயல்வோமாக.

கல்வி.

(108-ம் பக்கத்தொடர்ச்சி.)

அவனே—

"ஒருகுடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருகவென்னுதவருள்
அறிவுடையோனுறரசுஞ்செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பாலொருவனு மவன்கட்படுமே"

என்னும். புறநானூற்றுனும்,

"திரியழற்காணிற்றொழுப விறகின்
எரியழற்காணினிகழ்ப—வொருகுடியிற்
கல்லாதுமூத்தானைக் கைவிட்டுக்கற்றான்
இளமைபாராட்டுமுலகு" என்னுங்கவியாலும்,

"எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற்கற்றோரைவருகவென்பர்"

என்பதனாலும், தெரியவருகிறபடி உலகத்தில் மிகப்பிரசித்தனுமாவன். இங்ஙனம் உலகப்பிரசித்தமாகவே.

"மகன் றந்தைக்காற்றுமுதவியிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ்சொல்"

என்ற வேதபோதத்தின்படி மகன் தன்னுடைய கடமையை நிறைவேற்றிவிட்டான்- அப்போது தான்-

"ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்"

என்றபடி தநயனைப் பெற்ற தாய்க்குப் பரமசந்தோஷமுண்டாகிறது. அங்ஙனமின்றிப்பிள்ளை மட்டும் மூடமாய் வளர்க்கப்பட்டால் உன்னைப்பெற்ற வயற்றில் ஒரு உரலைப்பெற்றாலும் குத்திக்காய்ச்சிக் குடிக்கலாமே." என்றுதாய் வருத்தப்படுவள். இது நம்முடைய நாட்டில் வழங்கும் ஓர் வழக்கச்சொல்.

6. இதனாலே படிப்பிக்கவேண்டிய காலம் இளம்பிராயமென்றும், படித்தபிள்ளைகள் படியாத பெரிய ஆட்களைக் காட்டிலும் கவுரவமுள்ளவர்களாக மதிக்கப்படுவார்களென்றும், அந்தப்பிள்ளையைப் பெற்றமாதாவே சந்தோஷிப்பாளென்றுந் தெரிந்துகொண்டோம். அத்தகைய கல்வியைப் பெற்றுக்கொண்டார்கடே-

"அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்-
உறுங்கவலொன்றுற்றுழியுங்கைகொடுக்குங்
கல்வியினூஉங்கில்லைச் சிற்றுயிர்க்குற்றதுணை."

என்றபடி தர்மார்த்த காமமோட்சமென்கிற சதுர்வித புருஷார்த்தங்களும் உண்டாகும். இந்தப்பூத உடம்பு அழிந்துபோனாலும் புகழுடம்பு அழியாததாகவென்றும் நிலைபெறும். ஒரு துன்பம் வந்தகாலத்தில் கல்வியே உற்றதுணையாய் நின்று அத்துன்பநிவர்த்திக்கு ஓர் உபாயத்தைக் காண்பித்து ஆறுதலைப்படையச் செய்யும். என்றும் தெரியவருகிறது. ஆகையால்—

"கற்கைநன்றே கற்கை நன்றே"
"பிச்சைபுகினுங்கற்கைநன்றே"
"உற்றுழியுதவியுமுறுபொருள்கொடுத்தும்
பிற்றைநிலைமுனியாதுகற்கைநன்றே."

என்ற வாக்கியங்கள் நாம் கவனிக்கத்தக்கன' அத்தகைய கல்வியறிவுடையார்க்கே கடவுளு மறியப்படுவர். அந்தவுண்மை—

கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியைக்
கரையிலாக்கருணைமாக்கடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணிவிளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிர்ந்த கண்களுங்குளிர்ந்தனவே." என்றும்,

மற்றுப்பற்றெனக்கின்றி நின்றிருப்பாதமே பனம்பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப்பிறவாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயமே."

என்றும், எழுந்த தமிழ்மறைகளில் கற்றவர் விழுங்குங்கற்பகக்கனியேயெனவும் கற்றவர் தொழுதேத்தும் நற்றவா வெனவும் ஸ்தோத்திரிப்பது கொண்டு நன்கு புலப்படுகிறது. அதுமாத்திரமா! மற்றவரறியாமாணிக்க மலையையென்றதினல் கல்வி யறிவில்லாத்தவர்கள் கடவுளைத் தெரிந்து கொள்ளமாட்டார்க ளென்பதும் வலியுறுத்தப்படுகிறது. அதுபற்றியே—

"கல்லாநெஞ்சில் நில்லான் ஈசன்"

என்றொரு போதமு முண்டாயிருக்கிறது. ஆனபடியால் கடவுளையறிந்து அடைதற்கருகரல்லாத:—

"கல்லாதமூடரைக்காணவுமாகாது
கல்லாதமூடர்சொற்கேட்கக்கடனன்று
கல்லாதமூடருக்குக்கல்லாதார் நல்லாராம்
கல்லாதமூடர்கருத்தறியாரே"

என்றபடி கல்வியறிவற்றவர்களைப்பார்க்கப்படாது, அவர்கள் சொற்களைக்கேட்கப்படாது, என்றும், மூடர்களுக்குமூடர்களே நல்லவராதலின் கல்வியறிவுடையார் மூடர்களால் வெறுக்கப்படுவர் என்றும், அப்படி வெறுக்கப்படுவதற்குக்காரணம் அவரதறியாமையேயாமென்றும், நன்கு போதரல் கண்டாம். அந்தவுண்மை:—

"நற்றாமரைக்கயத்தினல்லன்னஞ்சேர்ந்தாற்போல்
கற்றாரைக்கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர்முகப்பர் முதுகாட்டில்
காக்கையுகக்கும் பிணம்" என்றகவியால்தெரிந்துக்கொள்ளலாம்.

7. இந்தமட்டில் கல்வியறிவுடையார்க்கே கடவுள் காணப்படுவரென்றும், அவர் மூடருடன் கலவாமல் அறிஞர்குழாத்திடை அமர்ந்திருப்பரென்றுந் தெரிந்துகொண்டோம். இனி ஒரு கதை ஞாபகத்துக்கு வருகிறது. அதைச்சொல்லிமுடிக்கிறேன்.

முன்னொருகாலத்தில் ஒரு தனவானுக்கு இரண்டு புத்திரிகள் இருந்தார்கள். அவர்களுள் மூத்தவள் ஒரு தனவானை மணந்தனள். அவன் தனவானாயினும் கல்வியறிவில்லாதவன். இளையவள் ஒரு ஏழையான மனிதனைக் கைப்பிடித்தாள். அவன் ஏழையானாலும் படித்தவன். மூத்தவள் தான் பணக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்ததனால் அநேகவித ஆபரணங்களை அணிந்திருந்தனள். ஒரு தினத்தில் இளையவளைப் பார்த்து "ஹே தங்காய்! நாம் ஒரு தாய் வயிற்றில் பிறந்திருந்தும், நான் பணக்காரனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறதும் நீ தரித்திரனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறதும் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நீஆபரணமில்லாதிருப்பதைப்பார்த்தால் எனக்குஉன்னை என்தங்கைஎன்றுசொல்லக்கூடவெட்கமாயிருக்கிறது" என்று பற்பலவிதமாய்ப் பேசினள், உடனேஇளையவள் தன் அக்காளைப்பார்த்து.

அக்காய்!

"கல்லாவொருவன்றாள் சேர்தலினுங்கற்றவனோ
டல்லற்படுதலழகன்றோ—சொல்லாங்
கருப்பு ரசங்கைக்குமோ கல்வியறிகோதாய்
விரும்புவதோ வேம்பின் கனி"

என்ற முதுமொழிக்கிணங்கக்கற்றவரோடிருந்து அவருடன் வருத்தப்படுவதானது கல்லாத மூடனோடிருந்து சந்தோஷப்படுவதிலும் எத்தனையோ பங்கு மதிப்புடையதேயாம்." என்று புத்திபுகட்டி அவமானப்படுத்தியனுப்பினள். என்பதுதான்.

இதுகொண்டு கல்வியின் மேன்மை யாவர்க்கும் புலப்படுதல் திண்ணம். ஆனால் இங்கே கவனிக்கத்தக்கதொன்றுண்டு. அதாவது-

இவ்விரண்டுபெண்களும் படிப்பாளிகள், அதினும் ஒரே தாய் மக்கள். அப்படியிருக்கவும் ஒருத்தி மூத்தவளாயிருந்தும் செல்வப் பொருளைமட்டுமே மதித்துக் கல்விப்பொருளின் மகிமையை மறந்து நின்றதென்னை? மற்றவள் இளையவளாயிருந்தும அதினும் எளியா ளாயிருந்தும் அவள் செல்வப்பொருளை மதியாது மகிழ்ச்சியடைவ தற்குக் காரணமென்னை? என்று ஆலோசிப்போமானால் மூத்தாள் மூடனைக்கூடியிருந்ததும் இளையாள் அறிஞனைக்கூடியிருந்ததுமே காரணமென்னலாம். ஆதலினாலே கல்வியறிவுடையானுக்குக் கல்வி யறிவுடையாளே இணக்கமான மணவாட்டியாவள். ஒருவர் படித்த வரும் மற்றொருவர் படியாதவருமாயிருப்பின் அவரதில்லறவாழ்க் கை சண்டிமாடும் நல்லமாடுங்கூடி யீர்க்கும் சகடு செல்வதுபோலவா கும். ஆதலின் அறிவுடைய பெண்களை மணப்பவரே அறம்வளர்க்க வல்லுநராவார். அந்தவுண்மையை யறியாது——————

அந்தோ! நமது இந்தியாதேசத்தில் "வெளியேறிமாப்பிள்ளைக் கு வித்தையென்னத்துக்கு" என்பளேயென்னும் பயமில்லாமல் "அடுப்பூதிப்பெண்களுக்குப் படிப்பென்னத்துக்கு" என்றுவாய்கூசா மல் அநேகர் பேசிக்கொள்ளுகின்றனர். அவர்தாமே பிள்ளைகளைப் படிப்பிக்கிறதைக் கண்ணைத்திறந்து வைக்கிறதென்றுஞ் சொல்லுவர். அப்படியானால்

ஆண்மக்களுக்கே கல்வி கண்ணுமென்று ஒரு சுருதிதானும் காண்பிக்க எவராலாயினு முடியுமா? அங்ஙனங்கேட்கப்படாத வெற் றுரையை நம்பி பெண்மக்களைப் படிப்பியாதவர்

> "விலங்கொடுமக்களனையரிலங்குநூல்
> கற்றாரோடேனையவர்"

என்னுஞ் சுருதிபோதத்தால் புத்திரிகளைப் பசுக்களாகப் பெற்றுவளர்த்துக் காளைகளாகியோர் கையில் ஒப்புக்கொடுப்பவராவ ரன்றோ. அந்தோ! இது மிகவும் பரிதபிக்கத் தக்கதே.

ஆகையால், ஆண்மக்களையும் பெண்மக்களையும் படிப்பிக்க வேண்டியதுதான் அறிவுடையார் கடமையென்று எனக்குத் தெரிந் தமட்டிலும் நான் உண்மையைச்சொன்னேன்.

8\. இதனாலே ஆண்பாலார் பெண்பாலாரிருவருக்கும் கல்வி யுரிமையையுடையதாமென்பது நாம் எல்லாரும் கவனிக்கத்தக்கது.

இவ்விஷயத்தை இவ்வளவில் முடித்துக்கொள்ளுகின்றேன். சுபம்.

த. ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை,
பேட்டை.

ஸ்ரீ இராமலிங்கசுவாமிகளின் சீவகாருணிய போதனைகள்.

(144-வது பக்கத் தொடர்ச்சி.)

இனி, இராமலிங்கசுவாமிகள் அளவுகடந்த சீவகாருணியமுடையவராக விருந்தமையால், அவர் ஜனங்களை நோக்கி, "உயிர் நீங்கிய உடம்புகளைச் சுடல் வேண்டாம்; சுட்டால் பிணங்களுக்கு நோகும்; அதுவேயன்றி அச்செயல் இறந்தவரிடத்து அளவு கடந்த அன்புடையவருடைய மனத்தையும் பெரிதும் நோகச் செய்கின்றது. இவையெல்லாம் ஒரு புறம் இருக்கப் பிணங்களைச் சுடுவது கோரச் செய்கையாகும். ஆதலின் அவற்றைப் புதைத்துவிடுங்கள் என்று வற்புறுத்திக் கூறுவாராயினர். அக்கருத்தைப் பின்வரும் பாடல்களாலுங் காண்க.

பிறந்தவரை நீராட்டிப் பெருக வளர்த்திடுகின்றீர் பேயரே நீர்
இறந்தவரைச் சுடுகின்றீ ரெவ்வண்ணஞ் சம்மதித்தீரிரவிற் றூங்கி
மறந்தவரைத் தீமூட்ட வல்லீரால் நும்மனதை வயிரமான
சிறந்தவரை யெனப் புகழச் செய்து கொண்டீரேன் பிறந்து திரிகின்றீரே.

அணங்கழு பேரோசையொடும் பறையோசை பொங்கக்கோரணிகொண்டந்தோ
பிணங்கழுவி யெடுத்துப்போய்ச் சுடுகின்றீரினிச் சாகும் பிணங்களே நீர்
கணங்கழுகுண்டாலுமொரு பயனுண்டேயென்னபயன்கண்டீர் சுட்ட
எணங்கழுசாம்பலைக் கண்டீரது புன்செயெருவுக்கு மியலாதன்றே.

குணம்புதைக்க வுயிரடக்கங்கொண்டது சுட்டாலதுதான் கொலையாமென்றே
வணம்புதைக்கவேண்டுமென வாய்தடிக்கச் சொல்கின்றேன் வார்த்தை கேட்டும்
பிணம்புதைக்கச் சம்மதியீர் பணம் புதைக்கச் சம்மதிக்கும பேயரே நீர்
எணம்புதைக்கத் துயில்வார் நும்பாற் றுயிலற்கஞ்சுவரே யிழுதையீரே.

சுட்டாலுங் கனத்தாலுங் களிக்கின்ற பேயுலகீர் கலை சேர்ந்தாரைப்
பொட்டாலுங் துகிலாலும் புனைவித்துச் சுடுகின்றீர் புதைக்க நேரீர்

சுட்டாலுஞ் சுடுமெது கண்டுமெதுடம்பு துடியாதென்சொல்லீர் நும்மைத்
தொட்டாலுந் தோடமுறும் விட்டாலுங் கதியிலை மேற்சூழ்வீரன்றே.

புலைத்தொழிலே புரிகின்றீர் புண்ணியத்தைக் கருங்கடலிற்போகவிட்டீர்
கொலைத் தொழிலிற் கொடியீர் நீர் செத்தாரைச் சுடுகின்ற கொடுமைநோக்கிக்
கலைத் தொழிலிற் பெரியருளங் கலங்கினரக் கலக்கமெலாங் கடவுணீக்கித்
தலைத்தொழில் செய் சன்மார்க்கந் தலையெடுக்கப் புரிகுவதித் தருணந்தானே.

சுவாமி இராமலிங்கருடைய விக் கொள்கை அனேகருக்கு உடன்பாடன்று. இந்தியாவில் பண்டைக் காலந்தொட்டே பெரும்பான்மையும் தகனஞ் செய்யும் வழக்கமும், சிறுபான்மை புதைக்கும் வழக்கமும் இருக்கின்றன. இங்கு ஆரியர், தமிழர் என்னும் இரு சாதியாரைத் தவிர்த்து மற்றக் கிருஸ்துவர், மகம்மதியர், பாரசிகர் என்பவர்கள் தத்தம் சமய நம்பிக்கையின்மேல் பிணங்களைப் புதைத்து வருகின்றனர். கிரீஸ் ரோம் முதலான தேசங்களிலும் பண்டைக்காலத்திலிருந்தவர்கள் பிணங்களைப் பூமியிலும், குகையிலும் புதைத்தார்கள். பின்னர், கிறிஸ்துவரும், மகம்மதியரும், பாரசிகரும் புதைக்கும் வழக்கத்தை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டனர். இப்போது மேற்றிசையிலும் கிறிஸ்துவ நாடுகளில் எங்கும் பிணங்களைப் புதைக்கும் வழக்கமே சாதாரணமாக நிலைபெற்றிருக்கின்றது. கிறிஸ்தவர் முதலானவர்கள் பிணங்களைப் புதைப்பதற்கு மரணத்தின் பின் நிலையைப்பற்றி சில கொள்கைகள் கூறுவர். இது கிடக்க, இந்துசமய நூல்களில் பிணங்களைச் சில காரணங்களால் தகனஞ் செய்யவேண்டுமென்றே விதிக்கப்பட்டிருக்கின்றது. யோகிகள், தத்வஞானிகள் தேகங்கள் மட்டும் சில காரணங்களால் புதைக்கப்படுகின்றன. இவ்வாறிருக்க, எல்லாருடைய உடல்களையும் புதைத்திடல் வேண்டுமென்று சுவாமிகள் உரைத்தது இத்தேசத்து வேதாகம ஸ்மிருதிகளைப் பிரமாணமாகக் கொண்டொழுகும் பெரும்பாலார்க்குச் சிறிதும் பொருத்தமின்றி இருக்கின்றது. ஆனால் சுவாமிகள் இவ்விஷயத்தில் வேதாகம ஸ்மிருதிகளின் விதிகளைக் கவனித்தார்களில்லை. அவர்கள் கவனித்தமையெல்லாம் காருணியம் ஒன்றேயாம். பிணத்தேகமானது உயிர் இருந்த இடமாகையால், அதை விறகுகளில் இட்டுக் கொளுத்தினால் ஒருகால் அதற்கு உபத்திரவம் உண்டாகுமென்றும் அச்செயல் பார்ப்பதற்குக் கொடுமையாக இருக்கின்றதென்றும் நினைத்தே பிணங்களைச் சுடல் வேண்டாம்; அவற்றை மண்ணில் புதைத்துவிடுங்கள் என்று சுவாமிகள் மிக இரங்கிக் கூறுவாராயிற்று. எனவே ஸ்மிருதிகளையுஞ் சில சமய பத்ததிகளையும் பெரும்பிரமாணமாகவுடைய சைவ வைஷ்ணவ மதஸ்தர்கள் மரணத்தின் பின் மனிதர் நிலையைப் பற்றிச் சில கொள்கைகள் வைத்துக்கொண்டு சுவாமிகளைப் பழித்துரையாடல் நியாயமன்று. இது நிற்க

சுவாமிகள் பிணங்களை மண்ணிற் புதைக்கவேண்டுமென்று காருணியத்துடன் கூறியது இக்காலத்து இயற்கை சாஸ்திரத்திற்கும், தேகாரோக்கிய சாஸ்திரத்திற்கும் ஒரு சிறிதும் பொருந்தாததாகுமென்று அறிவுடையோர் சிலர் கூறுகின்றனர். இது உண்மையே. பிணங்களைப் புதைப்பது உயிரு

டன் இருப்பவர் சரீரசுகத்திற்குப் பிரதிகூலமான தொழிலாகும். சனங்கள் வசிக்கும் இடங்களுக்குச் சமீபத்தில் பிணங்களைப் புதைப்பின். பிணங்களிலிருந்து குலைந்து அழிகின்ற சடவஸ்துக்களில் பரமாணுப் பூச்சுக்கள் உற்பத்தியாகி அங்குள்ள ஜனங்கள் வாழ்க்கைக்கு மிகுந்த கெடுதி விளைவிக்கும். முதலில் அவைகள் நிலத்தையும், கிணறுகளையும். நீரூற்றுக்களையும், நீர் நிலைகளையும் அசுத்தப்படுத்திடும். பிறகு அப் பரமாணுப் பூச்சுக்கள் ஆகாயத்தையும் கெடுத்திடும். நோய் உண்டுபண்ணும் பரமாணுப் பூச்சுக்கள் ஆகாயத்தில் வெகு தூரம் பரவிவிடுமென்று இக்காலத்துப் புதிய புதிய பௌதிக ஆராய்ச்சிகளால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது நிலத்திலும் நீரிலும் ஆகாயத்திலும் கலக்கும் பரமாணுப் பூச்சுக்கள் அபாயமான கொள்ளை நோய்களை யுண்டாக்கிச் சனங்களுக்கு அகால மரணத்தை விளைவிக்கும். இதுவல்லாமலும், எல்லாப் பிணங்களையும் புதைத்திடத் தொடங்கின் பூமியில் எங்கும் அடக்கக் குழிகள் நிரம்பி மற்றைக் காரியங்களுக்குப் போதுமான இடமில்லாமலாகும். ஆகவே பிணங்களை அக்கினியில் தகித்துச் சாமபராக்குதலே பரிசுத்தமானதும், உயிர் வாழ்வோர் தேக சுகத்தைக் கெடுக்காததும், அறிவுடையதும், நாகரிகத்திற்கிசைந்ததுமான முறையாகும். மேற்றிசையில் இம்முறை எங்கும் யாவராலும் அநுஷ்டிக்கப்படுதல் வேண்டுமென்று அங்குள்ள சில அறிவுடையோர் சட்டம் உண்டுபண்ண நினைக்கின்றனர். நிற்க

சுவாமிகள் இலக்கிய இலக்கண சமய தத்துவ தருக்க நூல்களை நன்கு உணர்ந்தமைபோல, இப்பௌதிக சாஸ்திர உண்மையையும் தேகாரோக்கியத்திற்குரிய விதிகளையும் உணரவில்லையென்று நாம் நினைக்கலாம். ஒருகால் இவைகளையும் அவர் அறிந்திருப்பினும் தம் சீவகாருணிய நிலையிலிருந்தே தம் கொள்கையை வலியுறுத்திவிட்டனரோ வென்று சந்தேகித்தற்கும் இடமுளது. ஆகவே பௌதிக தேகாரோக்கிய சாஸ்திரங்களின் பார்வையினின்று சுவாமிகள்மேல் குற்றங் கூறுதலுந் தக்கதன்று.

இவ்வாறே, சுவாமிகள் எடுத்துப் போதித்த சீவகாருணிய விஷயங்களுள் வேறு சிலவற்றைக் குறித்தும் பௌதிக சாஸ்திர ஞானமுடையவர்கள் பெரிதும் மறுத்து உரைக்கின்றனர். நிற்க

இனிச் சுவாமிகள் தம்முடைய நூல்களில் பல இடங்களில் இவ்வாறு சிறப்பாகச் சீவகாருணிய வொழுக்கங்களை எடுத்துப் போதித்தமையே யல்லாமல் பொதுவாக அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல், வஞ்சனை, பொய் கூறல், களவு புரிதல், கள்ளருந்தல், புறம்பழித்தல், செய் நன்றி மறத்தல் முதலிய தீமைகள் ஆகாவென்றும் யாவரிடத்தும் பொறுமையுடைமை, இன் சொற்கூறல், இன்முகங் காட்டல், சற்சங்கத்திருத்தல் முதலிய நல்லொழுக்கங்களைத் தழுவி வாழல்வேண்டுமென்றும் விளக்கக் காட்டுவராயினர்.

நல்லறியுடையோர்காள்! உள்ளதை உள்ளவாறுணரும் நடுநிலை வாய்ந்த பெரியோர்காள்! சுவாமிகளிடத்து விரோதகுணமுடைய சிலர், சுவாமிகள் தம்முடைய நூலில் சிற்சில இடங்களில் 'வஞ்ச நெஞ்சமுடையேன்' 'பிறர் பொருள்

கவரும் குணத்தேன்' 'கொலை புரியுங் கடையேன்' 'புலைத் தொழில்செய்யுமினத்தினேன்' தீங்கென்பனவெல்லாமறிவேன்' 'மனவாட்ட முற்றோர்க்கிரங்கிலேன்' 'தீயோர் கூட்டமே விழைந்தேன்' என்று இன்னின்ன விதங்களாக உரைத்தமையைக் கண்டு இராமலிங்கர் எல்லாத் தீயகுண வொழுக்கங்களையும் உடையவராய் இருந்தார் என நினைத்து சுவாமிகளைக் குறை கூறுவர் ஆ! அன்னோர் அறியாமையை என்னென்பேன்! பொதுவாக மனிதர் பாலுள்ள தீயகுண வொழுக்கங்களைத் தம்மீது ஏற்றிக்கொண்டு தம்மையே இகழ்ந்து கூறிக்கொள்ளல் தத்துவ ஞானிகளுடைய இயல்பாகும். ஸ்ரீமாணிக்கவாசகர் ஸ்ரீபட்டினத்தடிகள் முதலான தத்துவ ஞானிகளும் தம் பாட்டுகளில் சிற்சில விடங்களில் இவ்வண்ணமே தம்மை இகழ்ந்து கூறிக்கொண்டமையையுங் காண்க. ஆகவே கருணையிற் சிறந்த இராமலிங்க சுவாமிகள் மீது அன்னோர் குறை சுமத்தல் ஏனோ! நடுநிலைதிறம்பாதுரைமின்கள். அன்பர்களே ஸ்ரீஇராமலிங்கசுவாமிகள் சில தீக்குண வொழுக்கங்கள் தம்மிடத்திருப்பதாகத் தாமே கூறிக்கொண்டமை பற்றி அவர்கள் உண்மையில் அத்தகையோரே என்று நினையாதீர்கள்.

இக்காருணிய பரமாசாரிய சுவாமிகள் வடலூரில் இருந்த காலத்தில் அங்கு வசித்திருந்த மக்களுள் பெரும்பாலோர் அவருடைய ஜீவகாருணியப் பிரசங்கங்களையும் ஜீவகாருணிய உபதேசங்களையும் கேட்டுப் பெரிதும் அறிவடைந்து ஆதரவற்ற மக்களிடத்தும் மிருகாதி ஜீவர்களிடத்தும் அன்பு பாராட்டும் நன்மார்க்கத்தில் ஒழுகினதாக அறியப்படுகின்றது.

அன்பர்காள்! எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டும் இஜ்ஜீவ காருணிய வொழுக்கமானது எச்சாதிகளுக்கும், எக்குலங்களுக்கும், எம்மதங்களுக்கும். எம்மார்க்கங்களுக்கும் பொதுவானதாகும். அச் சன்மார்க்க சற்குரு மூர்த்திகள் மனிதர்களுள் யாதொரு வேறுபாடுங் கருதாமல் இஜ்ஜீவகாருணிய நல்லொழுக்கத்தின் திறத்தை எல்லாச் சாதியார்க்கும் எல்லாக் குலத்தார்க்கும், எல்லாச் சமயத்தார்க்கும். எல்லா மார்க்கத்தார்க்கும் பொதுவாக வலியுறுத்திப் போதித்தனர். அப் பரமகாருணிய மூர்த்திகள் இந்நல்லொழுக்கத்தை எடுத்து இவ்வாறு போதித்தமையால் அவர்க்கு எல்லாச் சாதிகளும், குலங்களும், சமயங்களும், மார்க்கங்களும் அங்கீகாரமாகும். ஆகவே அவ்வருள்மூர்த்திகள் போதனைகள் எல்லாரானும் பெரிதும் போற்றற்பாலவாம். எல்லாச் சாதியாரும் எல்லாச் சமயத்தாரும் எல்லா மார்க்கத்தாரும் எல்லாத் தேசத்தாரும் அக் குருமூர்த்தி சுவாமிகளுடைய நூல்களை வாசித்து உயிர்க்கு இனிமை தருகின்ற காருணிய வொழுக்கத்தைக் கொண்டொழுக முயல்வார்களாக இற்றைப்போது இராமலிங்க சுவாமிகளுடைய இனிய செந்தமிழ்ச் செம்பாட்டுக்களை உள்ளங் கரைந்துருகப் பாடி மகிழும் அன்பர்கள் சுவாமிகள் வலியுறுத்திய ஜீவகாருணிய திறத்தை ஆழ்ந்து அறிந்து அதனை உறுதிய கக் கடைப்பிடிப்பார்களாக. சுவாமிகள் செய்த பாடல்களை மட்டும் பாடுவதினாலும் கேட்பதினாலும் பலனில்லை. அவைகளில் போதிக்கப்பட்டுள்ள நல்லொழுக்கநெறியிலே கூடிய அளவிற்கு நிற்க முயலல் வேண்டும்.

மக்கள் யாவரும் ஜீவகாருணிய நல்லொழுக்கம் நன்கறிந்து நலப்படுதற்குப் பெருங்கருவியாய் நின்று அதை இன்சொற் செந்தமிழ்ப் பாட்டுகளாலும் இனிமை வாய்ந்த வசன நூலாலும் விளக்கிக் காட்டின ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளுடைய பெருங் கருணைத் திறத்தினை யாதென மொழிவேன்! அவர்களுடைய அருமை பெருமைகளை எவ்வாறு துதிப்பேன்! அச் சுவாமிகளுடைய அரிய நூல்கள் உலகத்தில் யாண்டும் என்றென்றும் சிறந்திடுவனவாக!

இவற்றோடு ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளுடைய ஜீவகாருணிய போதனைகளைப் பற்றிய என்னுடைய சுருக்கமான ஆராய்ந்த அபிப்பிராயங்கள் ஒருவாற்றால் முடிவு பெற்றன.

உருத்திரகோடீசுரர்.

தண்ணீர்.

(மொழிபெயர்ப்பு)

உலகத்தின் முக்காற்பங்கு தண்ணீரும் கால் பங்கு பூமியுமாக இருக்கின்றது. இதனாலேயே தண்ணீரின் மகத்துவம் நன்கு விளங்கும். மனிதருடைய சுகஜீவிதத்துக்கு இன்றியமையாதபொருள்களில் தலைமைஸ்தானம் பெற்றிருப்பது தண்ணீரேயாம்.

சாஸ்திரம் (Science) வளர வளர தண்ணீரின் உபயோகமும் வளர்ந்து வருகின்றது. கப்பல் பிரயாணத்துக்கும், ரெயில் யாத்திரைக்கும், மரங்களை அறுப்பதற்கும், சீனியுண்டுபண்ணல், பஞ்சு பக்குவப்படுத்தல் முதலிய தொழில்களுக்கும் இன்னும் அநந்தம் விஷயங்களுக்கும் தண்ணீரே பெரும் உதவியாக இருக்கின்றது.

இயற்கையில் ஏராளமாக அகப்படும் தண்ணீர் ஒரு திவ்விய ஔஷதமாகவுமிருப்பதால் அதன் ஔஷதகுணங்களை மட்டும் இப்பொழுது ஆராயத் தொடங்குவோம்.

1. ஒரு பிராயமான மனிதனுக்கு சன்னியாவது, சன்னிவலியாவது, தளர்ச்சியாவது அறிவு கேடாவது அசதிசன்னியாவது உண்டாயிருப்பதற்கும், சூரிய வெப்பத்தினால் மூர்ச்சையடைந்து விழுந்து போவதற்கும், இரண்டு மூன்று சட்டிகளில் அதிக குளிர்ச்சியான தண்ணீரை தயார்செய்து வைத்துக்கொண்டு, வியாதிக்காரனு

டைய தலையிலும் தோளிலும் பெருந்தாரையாக விடவேண்டும். அப்படி விடும்போது வியாதிக்காரனுடைய தலைமயிரைக்கத்தரித்து விடுவது நலம். உடம்பிலுள்ள துணிகளையும் நீக்கவேண்டும். ஒன்றிரண்டு நிமிஷநேரம் இவ்வாறு விட்டபிறகு வியாதிக்காரன் பெருமூச்சுவிடும்போது தாரையை நிறுத்தி ஈரமில்லாத இடத்தில் மாற்றி அனலில் வெதுப்பிய சீலையால் தேகத்தைத் துடைத்து கை தோள் கால் முதலிய பக்கங்களைச் சூடுண்டாக்கும்படி தேய்க்கவேண்டும். சுகம்கண்ட சிறிது நேரத்துக்குப்பின் வியாதிக்கூறு தோன்றுமானால் முன்போல தலையிலும் தோளிலும் பின்னும் தாரை விடவேண்டும். தண்ணீர் முழுமையும் ஒரேஅடியாய் விட்டுவிடாமல் சிறுசிறு தாரையாய் விடுவதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வியாதிக்காரனுக்கு உணர்ச்சியுண்டானபிறகு தாரையை நிறுத்தி விடவேண்டும். வயது சென்றவர்களுக்கும் துர்ப்பலர்களுக்கும் இம்முறை எற்றதல்ல. பெண்கள் சன்னிக் கூடினால் நகைக்கவோ அழவோ வேறு கோஷ்டி காட்டவோ செய்தால் மேல் சொன்னபடி தண்ணீர் தாரையாய் விடாமல் தண்ணீரை கைநிறையக் கோரி முகத்திலும் மார்பிலும் உறைப்பாய் அடிக்கவேண்டும். இவ்விதமாக மூன்று நான்கு முறை செய்யும்போது சன்னி நின்றுவிடும். சன்னிவலியுள்ள பெண்கள் சூதகமாயிருந்தால் மேலே சொன்னபடி குளிர்ந்த ஜலத்தைப் பிரயோகிக்கக்கூடாது.

2. சிசுக்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் வருகிற சன்னிவலிக்கு சலப்பிரயோகத்தை வேறுவிதமாகச் செய்யலாம். சன்னி ஆரம்பித்தவுடன் ஒரு பரந்த சட்டியிலாவது தொட்டியிலாவது சகிக்கத்தக்க சூடான ஜலத்தைவிட்டு அதில் குழந்தையின் தேகமுழுமையும் தாழ்த்தித்தலையை நிமிர்த்துவைத்து அதன்மேல் குளிர்ந்த ஜலத்தில் நனைத்த சீலையை இட்டு வைப்பதனால் சன்னிவலி நிற்கும். ஆனால் உடனே ஒரு பேதிக்கு ஆமணக்கெண்ணெய் கொடுப்பது நலம். குழந்தையை 5 முதல் 0 நிமிஷநேரம் வரை சுடுதண்ணீரில் வைத்திருக்கவேண்டும். அப்போது குளிர்ந்த ஜலமுள்ள சீலையை மாத்திரம் தலையில் சில மணிநேரம் வைத்திருக்கவேண்டும். சன்னி மறுபடியும் வரும்போதெல்லாம் இம்மாதிரி செய்பலாம். பின்னர்கால்களில் கடுகுபோல்ட்டிஸ வைத்து நிமிஷஞ்சென்றபின் எடுத்து விடவும். உடன்தானே பேதிக்குக் கொடுத்து வயிற்றைச் சுத்திபண்ணுவதும் நலம். குழந்தைகளைச் சுடுதண்ணீரில் குளிப்பிப்பதினால் அவர்களுக்குண்டாகும் வயிற்றுவலியும் சாந்தமடையும்.

3. வாந்திபேதிக்குக் குளிர்ந்த ஜலம் மிக நலமானது. நோயாளிக்கு எந்த மருந்தைக் கொடுத்தாலும் குளிர்ந்த ஜலத்தை எப்பொழுதும் தேவையானமட்டும் கொடுக்கலாம். நோயாளிக்கு தாகமிருக்கும்போது தண்ணீர் அதிகம் கொடுக்கக்கூடாதென்று தடுப்பது மிகவும் கெட்டவழக்கம். ஜலம் எவ்வளவுக்கு குளிர்ச்சியாயிருக்கிறதோ அவ்வளவுக்கும் நலம்தான். வியாதிக்காரனுக்கு தேவையானமட்டும் குளிர்ந்த ஜலத்தைக் கொடுக்கலாம். இப்படிக்குடிக்கும்படி கொடுக்கும் ஜலம் மற்ற மருந்துகளின் தொழில்களுக்கு உதவியாயிருப்பதுமன்றி வாந்தியினாலும் பேதியினாலும் போய்விடுகிற ஜலத்துக்குப்பதிலாக சரீரத்திலும் தங்கும்-

4. பெண்களுக்கு பிரசவித்தபின் அதிக இரத்தப்பாய்ச்சலுண்டானால் உடனே அதிக குளிர்ச்சியான ஜலத்தை வயிறு அடிவயிறு முதலிய இடங்களில் சிறிது உயரத்திலிருந்து ஜலதாரை விட்டு ஒரு மெல்லிய சீலைத்துண்டைக் குளிர்ந்த ஜலத்தில் நன்றாய் நனைத்து கருப்பவழியில் செலுத்தி வைக்கவும், மேற்படி சீலையை வாழைப்பூப்போல் சுருட்டுவது மன்றி அட்டிக்கடி மாற்றியும் இடவேண்டும். காடி ஒரு பங்கும் ஜலம் ஒரு பங்கும் சேர்த்து உபயோகித்தாலும் நலந்தான். இவை இரண்டும் கூடியவரையிலும் குளிர்ச்சியாயிருக்க வேண்டும். மேற்சொன்ன இரத்தப்பாய்ச்சல் நின்ற பிறகு சீலையை சலத்திலாவது காடிகலந்த ஜலத்திலாவது நனைத்து அடிவயிற்றில் இட்டுவைத்தால் அதிக குணம் உண்டாகும். பிரசவசமயங்களில் எப்பொழுதும் இரண்டு மூன்று சட்டிகள் நிறைய குளிர்ந்தஜலம் பக்கத்தில் வைத்திருக்கவேணடும். இப்படிச் செய்யாவிட்டால் கிணறு அல்லது ஆற்றிலிருந்து சலத்தைக் கொண்டுவர தாமதம் நேரிடவும் அதனால் இரத்தம் அதிகமாய்ப்போய் வியாதிக்காரிமரணமடையவும் ஏதுவாகும். இரத்தம் கிரமமாய்ப்போனாலும் அல்லது சிறிது அதிகமாகப்போனாலும் இவ்விதச்சிகிற்சை செய்யவேண்டிய அவசியமில்லை.

5. பக்கப்பிளவைகளுக்கும் தசையழுகிய புண்களுக்கும் அசறுள்ள புண்களுக்கும் கீழ்ச்சொல்லியிருக்கிறபடி விட்டால் சுகமுண்டாம். வியாதிக்காரன் மனம்போல் குளிர்ந்த ஜலமாவது வெந்நீராவது இரண்டு மூன்று சட்டிகள் நிறைய எடுத்து வைத்துக்கொண்டு அதை ஒரு செம்பிலாவது கெண்டியிலாவது எடுத்து புண்ணின்மேல் தொடர்ந்த தாரையாய் விடவேண்டும். இப்படித் தினந்தோறும் இரண்டுதரம் செய்யலாம். இதனால் மிகுந்திருந்த அசறுகள் போவ

துமன்றி சில நாளையில் புண்ணும் ஆறத்தொடங்கும். புண் காலிலாவது கையிலாவது இருக்குமானால் நோயாளிதானே ஜலத்தை விட்டுக்கொள்ளலாம். முதுகிலாவது கழுத்திலாவது இருந்தால் வேறொருமனிதனைக்கொண்டு விடும்படி செய்யவேண்டும். ஒன்றிரண்டடி உயரத்திலிருந்து ஜலத்தைப் புண்ணின்மேல் விடவேண்டும். அசறு முற்றும் நீங்கி செம்புண்ணாகிவரும் காலத்தில் மெழுகு பிளாஸ்திரியை உபயோகப்படுத்தலாம். குறைந்த பட்சம் ஒருமணிநேரமாவது ஜலம் தாரை விடவேண்டும்.

6. மூத்திரம் போகாமல் தடைபட்டிருந்தால் சீலையை சுடு தண்ணீரில் முக்கி வியாதிக்காரன் சகிக்கத்தக்க சூட்டோடு வயற்றிலும் அடிவயிற்றிலும் இடவேண்டும். ஆறும்பொழுதெல்லாம் துணியை மாற்றி மாற்றி சுடு தண்ணீரில் முக்கி இடவேண்டும். இதுவுமல்லாமல் தொட்டியிலாவது பரந்தபெரிய பாத்திரத்திலாவது வெந்நீரை விட்டு அதில் வியாதிக்காரனை 20 நிமிஷம் உட்காரும்படி செய்தாலும் சுகமுண்டாகும்.

7. சுரத்தினால் தோலி சூடாகவும், வாயுலர்ந்தும் தாகம் அதிகமாயும் இருக்கும்பொழுது நேர்மையான அரிசிமாவை குளிர்ந்த ஜலத்தில் கலக்கியாவது, அல்லது, எலுமிச்ஞ்சாறையாவது செழிப்பாய்க்குடிக்கவேண்டும். அப்பொழுது நன்றாய்க் குளிர்ந்த ஜலத்தினால் தலையை அடிக்கடி நனைத்துக்கொண்டிருக்கவேண்டும்.

8. அம்மை நோயால் உண்டாகும் சுரங்களுக்கும் தண்ணீரைத் தேவையானமட்டும் குடிக்கக்கொடுப்பதோடு, வெந்நீரிலாவது, ஒரு பங்கு காடியும் மூன்று பங்கு ஜலமும் கலந்த நீரிலாவது மெல்லிய சீலை அல்லது கடல்காளானை நனைத்து தேகமுழுதும் பதமாய்க் கழுவவும் வேண்டும். வியாதிக்காரனுக்கு வெந்நீரைவிடக்குளிர்ந்த ஜலத்தில் அதிகவிருப்பமிருந்தால் குளிர்ந்த ஜலம் கொடுக்கலாம். இப்படிதினம் இரண்டு மூன்று முறை செய்யலாம்.

9. தொண்டைப் புண்களுக்கு சுடுதண்ணீரின் ஆவியை உள்ளுக்கு சுவாசம் வாங்கினால் அதிகக் குணம் உண்டாகும். நல்ல வெண்டைக்காய் பத்தோ பதினைந்தோ கொண்டுவந்து சிறுதுண்டுகளாக வெட்டி தண்ணீரில் வேகவைத்து அந்த நீரின் ஆவியை சுவாசம் வாங்கினால் அதைவிட மிகுந்த நன்மை உண்டாகும் மேற்படி ஜலத்தை வாய் சுருகின பாத்திரத்தில் விட்டு அதன் ஆவி தொண்டைக்குள்

நன்றாய்ச் செல்லும்படி வாயைப் பாத்திரத்தின் வாயின்மேல் அடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

10. சுடுதண்ணீர் ஒற்றிடம் புதியவிப்புருதிகள், சுளுக்கு, குன்மவாய்வு, குடல்வலி, சுவாசகாசம், சுவாசமுட்டுதலுடனுண்டாகும் கடினமான இருமல் முதலிய நோய்களுக்கு மிக உபயோகமானது. ஒற்றிடம் இடவேண்டும் ஸ்தலத்தை மூடத்தக்க அளவுக்குச் சிறிது அகலமுள்ள கனமான துணிகளை மடித்து நோயாளி சகிக்கத்தக்க சூடுள்ள, ஜலத்தில் நனைத்து ஜலம் வடியாமலிருக்கும் படி பிழிந்துவிட்டு இடவேண்டிய பக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். இரண்டு மூன்று மின்னிட்டு நேரம் சென்று சூடு ஆறுமுன் வேறே ஒரு சீலைப் பக்குவஞ்செய்து வைத்துக் கொண்டு ஆறின சீலையை எடுத்துவிட்டு இடைவிடாமல் உடனே அதை இடவும். இவ்விதமாய்க் கால்மணி அல்லது அரைமணிநேரம் வரை சூடாக மாறி மாறிச் செய்யவும். கடினமான தலைநோவுகளுக்கும் இந்தச் சுடுதண்ணீர் ஒற்றிடம் மிகுந்த குணத்தைக் கொடுக்கும். பிரசவமானபின் உதிரநீரை நன்றாய்ப் போக்குவதற்கும் அதை உபயோகித்தால் நல்ல பயனுண்டாகும்.

11. நாட்பட்டவாதம், ஒன்றிலும் வாசியாகாத தோல்வியாதிகள், கால் கை முட்டுகளின் வலி, ஆரம்பகாலத்திய நீரழிவு, மகோதரம், மற்றும் சருமவியாதிகள் இவைகளுக் கெல்லாம் சுடுதண்ணீர் ஆவியைப் பிடித்தால் மிகுந்த பயனுண்டாகும். மேற்படி வியாதியோடு சுரமுண்டாயிருந்தால் இந்தப் பிரயோகம் ஏற்றதல்ல.

இன்னும் பலவித நோய்களுக்குத் தண்ணீர் சிறந்த ஔஷதமாக இருக்கிறது. ஜெர்மனி, பிரான்சு முதலிய நாடுகளில் குஷ்டம் முதலிய பயங்கரமான நோய்களையும் தண்ணீரினால் நீக்கக்கூடிய ஒரு புது வைத்திய முறை அநுஷ்டிக்கப்பட்டுவருகிறது. அம்முறைகளைப் பற்றி இன்னொருமுறை கூறுவோம்.

பத்திராதிபர்.

ஓர் மஹரிஷியின் உபதேசங்கள்.

1. பாவஞ் செய்யாமலிருப்பதே நன்று. ஏனெனின் பின் தாபம் அனுபவிக்கவேண்டாம். சதா சத் கர்மமே செய்யவேண்டும். ஏனென்றால் பின் கஷ்டமனுபவிக்கவேண்டாம்.

2. ஒருவன் ஒரு பாவஞ் செய்துவிட்டானானல் திரும்பவும் அவன் அதைச் செய்யாதிருக்கட்டும். ஒருவன் பாவஞ் செய்துவிட்டதைப் பற்றி சந்தோஷிக்கவேண்டாம். ஏனெனின் தின்மையின் சந்ததியே சங்கடம்.

3. ஒருவன் பிறர்க்கு நன்மை செய்துகொண்டு வருவானானல் அவன் அவ்விதமே செய்து வரட்டும். அதில் அவன் சந்தோஷமடையட்டும். ஏனெனின் நன்மையின் சந்ததியே சுகம்.

4. ஜலம் துளி துளியாக விழுந்து குடம் நிறைகிறது. சின்னஞ் சின்னமாகவே ஒருவனுடைய பாவமுங் கூடிவருகின்றது.

5. "பல துளி பெரு வெள்ளம்." ஒருவன் செய்துவருகிற நன்மை எவ்வளவு சிறிதாக விருந்தபோதிலும் சொற்பஞ் சொற்பமாகப் பெரிதாய்விடுகிறது.

6. பலமில்லாத மரத்தை காற்றடித்துக் கீழே விழச் செய்கிறது. ஆகாரங்களைக் கிரமப்படுத்தாமல் இந்திரியங்களை வசப்படுத்தாமலிருக்கிறவனை குரோதம் தட்டிக் கீழே மறிக்கின்றது.

7. தரையில் பலமாய் உறைத்திருக்கும் பாறையை காற்றுத் தள்ளிமறிக்கிறதில்லை. காமங்களைக் கூட்டாக்காமல் இந்திரியங்களைத் தன் வசப்படுத்திமனதைத்திடமாய் வைத்துக்கொள்ளுகிறவனை குரோதம் கீழே தள்ளி மறிக்கிறதில்லை.

8. தன்னிடத்திலிருக்கிற குற்றங்களைக் கண்டுபிடித்துக்கொள்ளுகிறவன் அம்மட்டிலுஞ் சமர்த்தனாகிறான்.

9. தன் குற்றங்களைத் தான் அறியாதவன் முழு மடையனாகிறான்.

10. தன் குற்றங்களைக் கண்டுபிடித்து அக்குற்றங்களை மாற்றி வருகிறவன் தான் பெரியவனென்றுசொல்லுகிறவனை விட மிக சிரேஷ்டனாகிறான்.

11. விவேகி முதலில் தன்னைத் திருத்திக் கொள்ளுகிறான். பிற்பாடு தன் அனுபவங்களைப் பிறர்க்குக் காட்டிக்கொடுத்து அவர்களையுந் திருத்திக்கொள்ள முயலுகிறான்.

12. மனோவியாகுலமும் தரித்திரமும் அகங்காரத்திற்கு நல்ல ஔஷதம். பிறர் கஷ்டங்களை அறிய தன் கஷ்டங்கள் நல்ல மார்க்கமாயிருக்கின்றன.

13. குளத்தில் பாசி படர்வது போல மனதில் அழுக்குகள் பற்றிக்கொண்டே வருகின்றன. குளத்தை விர்த்தி பண்ணுவதற்கு ஒவ்வொரு தினமும் எவ்விதம் வேலை செய்யவேண்டியதோ அவ்விதமே நிமிஷந் தோறும் நம்மனதில் பற்றிக்கொண்டு வருகிற கெட்ட எண்ணங்களை மாற்ற ஒவ்வொரு தினமும் முயற்சிசெய்யவேண்டியது.

14. நல்ல காற்றைக் கொண்டு எவ்விதம் துர்வாயு வெளிப் படுத்தப் படுகிறதோ அது போலவே நல்லெண்ணங்களைக் கொண்டு கெட்ட எண்ணங்களை மாற்றவேண்டும்.

15. நல்லெண்ணங்களாவன:— பிறர் வாழப் பிரார்த்தனை ஈசுவரநாம ஜெபம். புராண படனம். பக்தி யோக ஞான நூல்களை வாசித்தல் முதலியன.

16. பஞ்சாங்கம் மழை பெய்யும் சமயத்தைத் தெரிவிக்கிறது. பஞ்சாங்கத்தைப் பிதுக்கினால் ஒரு சொட்டு ஜலமேனுமில்லை. இது போலவே வாயாரப் பிரசங்கஞ் செய்கிறவன். இவனிடத்தில் அனுபவம் அபூர்வம் ஆயினும் சத்துக்கள் அதனைக் கவனியாது நன்மைகளை எடுத்துக் கொள்ளுவார்கள். அசத்துக்கள் குற்றங்களைக் கண்டு பிடித்து ஆக்ஷேபம் பண்ணுவார்கள்.

D. அகஸ்திய லிங்கம்பிள்ளை. F. T. S.

தற்காலஇந்துக்கள்.

(122-வது பக்கத் தொடர்ச்சி.)

மார்கழி மாதப் பத்திரிகையில் நம்மவர்களுக்கு உண்மையைப் பற்றிய மதிப்பு நாளுக்குநாள் குறைந்து வருகிறதென்றும் அதனால் நம்மவர்கள் முயற்சிகள் எல்லாம் பயன் பெறு தொழிகின்றன வென்றும் ஒருவாறு விளக்கினோம்.

இதற்கெல்லாம் காரணம் நம்மவரது தன்னலப் பிரியமென்னும் துர்க்குணமேயாம். மகன் தந்தையை நேசிப்பதும், தந்தை மகனை நேசிப்பதும், மனைவி கணவனை நேசிப்பதும், கணவன் மனைவியை நேசிப்பதும் சிநேகிதர்கள் ஒருவரை யொருவர் நேசிப்பதும் தன்னலங்கருதியேயாகும். பொதுவாக காரணம் பற்றி நேசிப்பதே உலக இயல்பு. இயற்கையும் இதற்கு அநுகூலமாகவே இருக்கின்றது. உதாரணமாக நமது உறுப்புகளைப் பார்ப்போம். கண்ணுக் கினிய காட்சிகளைக் காணவே கண்கள் விரும்புகின்றன. சுவை மிகுந்த உணவை உண்ணவே நாவும் விரும்புகின்றது. நன்மணம் பொருந்திய பொருள்களை முகரவே மூக்கும் ஆசிக்கின்றது. இதுபோல தனக்கு ஏதேனும் நன்மை செய்தோரையாவது செய்யத் தகுந்தோரையாவது நேசிப்பதே சாமானியர் குணமாக இருக்கின்றது. உலகவியல்பு இதுவாயினும் அதனை மட்டும் அநுசரிப்பது உத்தமர் குணமன்று. அங்ஙனமாயின் நாம் பெற்ற அறிவினால் ஒரு பயனும் அடையாதவர் ஆவோம். மெலியாரை வலியார் வாட்டுவதும் ஊனைத் தின்றூனைப் பெருக்குவதும் இயற்கை விதியாயிருக்கின்றதெனினும் நாம் அங்ஙனம் செய்வோரை மதிக்கின்றோமா? இயற்கை விதிக்கும் தரும முறைக்கும் அநந்தம் பேதங்கள் உள. இயற்கை விதியை மட்டும் அநுசரிப்போரே அநாகரீகராவர். நாகரீக மாக்கள் தரும நெறியைத் தழுவி நடப்பர். கற்கால உலோககால மனிதர்கள் இயற்கை விதியைத் தழுவி, விலங்கனையராய், உண்பதும் உறங்குவதுமே பெருஞ்சுக மென்றெண்ணி உயிர் வாழ்ந்தனர். நாமோ நாகரீக மக்கள் எனப் பெயர் புனைந்து அவரினுங் கடையராய் உயிர் வாழ்கின்றோம். நமது நாட்டில் கிரிமினல் சிவில் கோர்டுகள் தேவையானமட்டும் இல்லையென்று பலர் கூறுவதை நாம் காதாரக் கேட்கின்றோமல்லவா? வருஷா வருஷம் நூதனக் கோர்டுகள் திறக்கப்படுவதையும் கண்ணாரக் காண்கின்றோ மல்லவா! இந்த சம்பவங்களின் பொருள்தான் என்ன? நாம் அநாகரீகர் என்பதேயாம். கிரிமினல் சிவில் கோர்டுகள், நாம் துர்க்குணமுடையோமென்பதற்கு எழுப்பிய ஞாபகச்சின்னங்களே. நாம் ஒழுங்காக இருப்பின் அவைகள் எதற்காக வேண்டும். நாம் நீதிநெறி தவறி தன்னயம் பேணி நாட்கழிப்பதினாலன்றோ அந்தஸ்தாபனங்களுக்குத் தேவை உண்டாயிற்று. நாம் நமது நன்மையைப்போலவே பிறர் நன்மையையும் கருதமுயல்வோமாயின் நமது தற்கால நிலைமை எவ்வளவு மாறுதலடையும். இவ்வுலகமே பொன்னுலகமாகுமே! யாவரும் சச்சரவின்றி சமாதானத்தோடு ஒரு தாயகட்டிற் பிறந்த உத்தமமக்களேபோல் வாழலாமே! நாம் எடுக்கும் முயற்சிகள் எல்லாம் நற்பயனடையுமே. நமது பெருமையும் புகழும் ஓங்குமே. இது நிற்க.

இரண்டாவதாக நம்மவருக்குள் குடிகொண்டிருக்கும் துர்க்குணம் மனமொழி மெய்களுக்குள் ஒற்றுமையில்லாமையேயாம். ஒன்றை எண்ணி ஒன்றைச் சொல்லி ஒன்றைச் செய்வதற்கு நம்மவர்களைப்போல் சமர்த்தர்கள் இப்பூமண்டலத்திலில்லை. பால்ய விவாகம் தீமையானதென்றும், நம்மவர்கள் நோயாளிகளாகவும் அற்பாயுளுடையவராகவும், புத்தி கூர்மையற்றவர்களாகவும் இருப்பதற்கு அதுவே காரணமென்றும், வெண்கலக் கடையில்யானை புகுந்தது போலவும் கோடையிலெழுந்த இடிநாதம் போலவும் பிரசங்கசாலையிற்புகுந்து வாய்மாரி பொழியும் சமுதாய பரிஷ்காரிகள் நமது நாட்டில் ஏராளமாயுண்டு. ஆனால் தன் 5 வயதுடைய மகளுக்கு 6 வயதுடைய பய்யனை மாப்பிள்ளையாக்கி பாவைக்கூத்துக்கொப்பான போலிக்கல்யாணம் செய்யும் தருணம் வரும்போது யாராவது அவர்களிடம் சென்றுகேட்டால் “ஆமாம்! பிரசங்கமெல்லாம் சரிதான். ஊரிற்குடியிருக்கவேண்டுமானால் ஊர்வழக்கத்தை அனுஷ்டிக்கவேண்டாமா? உலகத்தோடொட்டவொழுகல் பலகற்றும், கல்லார் அறிவிலாதார்” என்று நாயனாரும் கூறியிருக்கிறாரே என்று வெகு சமத்காரமாய்க் கூறிவிடுவர். “உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே” ஆகலின் அறிவிற் பெரியோர் கொள்கையைத் தழுவி நடவாதவரையே நாயனார் அறிவிலாரெனக் கூறினாரென்ற உண்மையையும் அறியாதவர் போல் நடிப்பர். அந்நாயனார் தானே

“வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்”

என்று பின்னும் மொழிந்திருப்பதை இவர்கள் அறியார்களா? தன் மனம் தீயதெனக் கண்ட ஒன்றை நீக்கத் துணிவு கொள்ளாத மனிதரும் மனிதராவாரா? அவர்களை விலங்கினுங் கடையரெனப் பழிக்கினும் போதியதாகுமோ? அவர்கள் உண்மையில் தன் மனச்சாட்சி கண்ணில் மண்ணைப் போடும் ஒருவகை வஞ்சகரன்றோ? மனச்சாட்சி கேவலமான தன்று. அது எங்கும் நிறைந்த சுயஞ்சோதியின் அம்சமாக நம்முள்ளத்தமர்ந்திருக்கின்றது. நாம் தீமைசெய்யத்துணியுங்காலத்து அது நம்மைத்தடுக்கின்றது. நமதறியாமையினால் அதன் கட்டளைமை மீறி நடக்கின்றோம். நமது கல்விக்கும் பழக்கத்துக்கும் தக்கபடி அதன் பெருமையும் மகிமையும் பரிசுத்தத்தன்மையும் நமக்கு நன்கு விளங்கும். ஆகையால் அதன் கட்டளையை மீறி நடப்பதினும் பெரும் பாதகம் வேறில்லை.

மூன்றாவதாக நம்மவரிடமுள்ள ஒரு பெருங் குறைபாடு ஜீவிதநோக்கம்இல்லாமையே. இதன் காரணம் ஜீவிதத்தைப்பற்றி நம்மவர் கொண்டிருக்கும் தப்பெண்ணங்களும் அபிப்பிராய வித்தியாசங்களுமேயாம். "விதிபெரிதா? மதி பெரிதா?" என்னுமோர் வாதம் வெகு காலமாக நடந்து வருகின்றது. இவ்வாதம் உண்டானது நமது தேசத்தில் மட்டுமன்று. ஐரோப்பிய நாடுகளிலும் இவ்வாதம் அநந்தம் ஆண்டுகளாக நடந்து வருகிறது. எனினும் இவ்வாதத்துக்கு இது காறும் ஒருஉறுதியானமுடிவு உண்டாகவுமில்லை; உண்டாவதுமில்லை. விதியே பெரிதென்னும் நம்பிக்கையுடையோர் நாம் முயற்சிப்பதில் பயனென்ன? எல்லாம் பூர்வ கருமப்பயனான விதிப்படி நடக்கும். என முயற்சிகுன்றி விதியின் கைப்பாவையாய் நாட்கழிக்கின்றனர். மதியே பெரிதென்னும் நம்பிக்கை யுடையோர் என்னை? "யான் யாருக்கு அடிமை. என் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் யானே காரணன்." என ஊக்கங்குன்றாதுழைக்கின்றனர். ஆனால் அங்ஙனம் உழைப்போரில் சிலர் விரும்பியவாறே வெற்றிபெறுவர்; சிலர் விரும்பிய பயன்பெறாது தோல்வி யடைவர். தோல்வியடையுங் காலத்து விதி பெரிதென்னுங் கொள்கையுடையோர் தமது நம்பிக்கைக்கு அஃது திருஷ்டாந்தமென்று மகிழ்ச்சியடைவர். இன்னொரு சாரார் மதி விதி யென்பன சொல்லளவில் இரண்டாய்த் தோன்றினும் பொருளளவில் ஒன்றே என்றும் கூறுநிற்பர். இவ்வண்ணம் பல வாதங்கள் பலர் கூறினும் நாம் நமது அநுபவத்தை உற்றுநோக்கி யொழுகத் துணிவுகொள்ளல் வேண்டும். மிகத் தாழ்வான நிலைமையிலிருந்த பலர் தமது சுயமுயற்சியினால் உயர்வான நிலைமை யடைந்திருப்பதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கின்றோம். ஆதலின் முயற்சி யுடையார்க்கு உலகத்தில் வெற்றி யடைய முடியுமென்றும் நமக்கு நம்ப இடமுண்டு. சிலர் ஜீவித முழுதும் முயற்சித்தும்தோல்வி யடைகின்றனரேனும் வெற்றியடையும் பலரையும் நாம் காண்பதினால் அவரையே நாம் மேற்கோளாகக் கொண்டு உழைக்கவேண்டும். ஆகவே நமது ஜீவித வெற்றித் தோல்விகளுக்குக் காரணரானோர் நாமே என்று ஒருவாறு ஏற்படுகின்றது. ஏற்படவே நாமும் இளம் பிராயமுதல் ஒரு உத்தம நோக்கத்தை முன்னிட்டு அதனைக் கைவல்லியப்படுத்த முழு மனதோடும் உழைக்கவேண்டுமென்றும் தெளிவாகின்றது. ஜீவித நோக்கமில்லாத வாழ்வு அரங்கின்றி வட்டாடுவதற்கொப்பாகும். நம்மவர்கள் கல்விப் பயிற்சி தொடங்கும் பொழுது அவர் விருப்பத்துக்குப் பொருத்தமான கல்வியையேனும் தொழிலையேனும் கற்க முயலுவதில்லை. யாவரும் பள்ளிக்குப் போவதுபோல் அவர்களும் செல்வர். காலியுள்ள இடத்தில் இருப்பர். அங்குள்ளோர் கற்பிப்பதைக் கேட்பர். கடைசியாக "ஸ்ட்டிபிக்

கெற்று" என்ற சண்டி இக்கட்டுங் கொண்டு வெளி வருவர். தாய் தந்தையர்கள் பணம் வருவாய்க்கு வழியுள்ள உத்தியோகமே சிறந்த தென்று உபதேசிப்பர். அதன்படியே ஒவ்வொரு உத்தியோகமாகத் தேடி அலுத்துக் கடைசியாகக் கிடைத்தது போதும் என்று பத்துப் பதினைந்து ரூபாய்க்கு எங்கேனுமொரு மூலையிலுட்கார்ந்து இற கோட்டுவர். உத்தியோகம் ஒன்றுமே கிடைக்கவில்லையானல் வர்த்த கஞ் செய்யத் துணிவர். சாதாரணமாக தகுதியுடையார்க்கு ஏதேனு மொரு உத்தியோகம் கிடைக்கும். தகுதி யற்றவர்களே வர்த்த கத்துக்கு வந்து தோல்வி யடைவர். இது நமக்கு அநுபவமான விஷயம். B. A. L. T. பாஸ் பண்ணினவர்கள் 10 15 வருஷம் உபாத்தியாயர் உத்தியோகம் செய்து பின்னர் வக்கீலாக முயல்வதும், வக்கீலுத்தியோகஞ்செய்தவர்கள், வர்த்தகர்கள் ஆவதும், சிலர் வருஷத்துக்கு ஒரு இலாகாவாக உத்தியோகம் மாறுவதும் நாம் நாள்தோறும் பார்க்கவில்லையா? இதற்கெல்லாம் காரணம் ஜீவித நோக்கமில்லாது ஜீவிதந் தொடங்குவதேயாம். இதனலேயே புத்திசாலிகளான பலர் ஜீவிதத் தோல்வி யடைகின்றனர். வக்கிலாகவேண்டியவர்கள் வயித்தியனுனுலும், வியாபாரியாகவேண்டியவன் உபாத்தியாயரானுலும், ஒரு பயனும் உண்டாகாது. அவரவர்களுடைய மனோ நிலைமைக்கும் கல்விப் பயிற்சிக்கும் தகுதிக்குந் தக்கவாறு உத்தியோகத்தை முதலிலேயே தெரிந்துகொண்டு, அதற்கவசியமான முஸ்தீபுகளை ஆரம்பத்திலேயே தேடி ஜீவிதந் தொடங்கினல் நிச்சயமாக நம்மவர் நிலைமை தற்காலத்தினும் மிகச் சிறப்படையும். பத்திராதிபர்.

(தொடரும்)

தேக ஆராய்ச்சி.

நம் தேகத்தே குடிகொண்ட தேகியானவன் தேகத்தை அபிமானித்துவளர்த்துத் தனது பூர்வஜன்மங்களில் வாய்ந்த கர்மத்தின் சுகதுக்கங்களை யனுபவிக்கக் கருவியாய்மாத்திரம் அமைந்துளனோ வென்று யோசிக்கின் அது அப்படியனுபவித்து நற்கதியடைய ஏற்பட்ட ஒரு கருவியேயென ஆன்றோர் பொருள் கொள்ளினும் தேகத்தை ஆராயுமிடத்து அது வேறு சில உபயோகங்கட்கு அமைந்துள தெனக் காணப்படுகின்றது.

தேகம் ஸ்தூல சூட்சும பஞ்சபூதங்களே உரிய பிரமாணமாகச் சேர்த்து அமைக்கப்பட்டுள்ளதென்று தெரிகிறோம். சூட்சுமதேகம் அதிருசியமும் ஸதூலதேகம் திருசியமுமானதன்றோ. ஸ்த்ரீ புருஷ சம்பந்தத்தால் புருஷனில் உற்பத்தியான பனித்துளிபோன்ற ஒரு துளிவிந்துவில் வசித்துவரும் சூட்சுமதரிசனயந்திரத்தால் காணக் கூடிய அநேக ஜீவிகளிலொன்று கர்ப்பப்பாத்திரவழியாய் அதிவிரை விற் சஞ்சரித்து ஸ்த்ரீயின் விந்துக்கருவிகளில் வசிக்கும் தன்னைப் போற்பிரமாணமுடைய பிராணியுடன்கலந்து இரண்டுமொன்றாய் ஓர் உருக்கொண்டு அண்ட ஆகாரமாய்த் தாயின் உணவின் சத்து ரசங்களடங்கிய ரக்தத்தினின்றும் தனக்கு வேண்டியவுணவை ரக்த நாடிகள் வழியாய் ஆகர்ஷித்து ஒன்று இரண்டாகவும் இரண்டு நான் காகவும் நான்கு பதினாறாகவும இரட்டித்தபெருக்கத்துடன் அநேக சிறுபிராணிகளாய்ப் பெருகித் தேகஅமைப்புக்குத்தக்கபடி வெவ் வேறுகூட்டங்களாய்ப் பிரிந்து, ஒவ்வோரு கூட்டமும் ஒவ்வோர் உறுப்புக்கள் அமைக்கவேற்பட்டு நம் தேகத்தில் அடங்கிய மாம்சம் எலும்பு மஜ்ஜை ரக்தம் நாடி நரம்புமுதலிய பலவித திருசிய அவ யவங்களாகின்றன.

காலப்பிரமாணமோவெனில் ஸ்த்ரீபுருஷஜீவர்களின் கர்ப்பப் பாத்திரத்தில் ஏகோபித்த ஒருவாரத்தில் ஏற்பட்ட அண்டம் அரைக் கால் இஞ்சு குறுக்களவுள்ளதாயும், இரண்டுவாரத்திற்குள் காலே அரைக்கால் இஞ்சு குறுக்களவுள்ளதாயும், நான்குவாரத்தில் ஒரு புறாவின் அண்டப்பிரமாணமாய் அதினுள்ளடங்கியசிசு ஒரு அங்குலத் தின் மூன்றில் ஒருபாகநீளமாயும், இரண்டுமாதத்தில் ஒரு கோழியின் அண்டப்பிரமாணமாய்ச் சிசு ஒன்றே அரைக்கால் அங்குலம்நீளமும் முக்கால் தோலா நிறையு முள்ளதாயும், மூன்றாம் மாதத்தில் ஒரு கிச்சிலிப்பழப்பிரமாணமும் சிசு மூன்று அல்லது நான்கு அங்குல நீளமும் ஏழரைத்தோலா நிறையுமுள்ளதாயும், நான்காம் மாதத்தில் அண்டவடிவுகுறுகிச் சிசுவடிவாய் ஐந்து, ஐந்தரை அங்குல நீளமும் ஏறக்குறைய இருபது தோலா நிறையுமுள்ளதாயும், ஐந்தாம் மாதத் தில் ஒன்பதங்குல நீளமும் ஒரு இருத்தல் நிறையுமுள்ளதாயும், ஆறுமாதத்தில் ஒரு அடி நீளமும் இரண்டு, இரண்டரை இருத்தல் நிறையுமுள்ளதாயும், ஏழாம்மாதத்தில் பதினைந்தங்குல நீளமும் மூன்று மூன்றரை இருத்தல் நிறையுமுள்ளதாயும், எட்டாம் மாதத் தில் பதினாறங்குல நீளமும் நான்கிருத்தல் நிறையுமுடையதாயும், ஒன்பதாம் மாதத்தில் பதினெட்டங்குலநீளமும் நான்கரையிருத்தல்

நிறையுமுடையதாயும், பத்தாம்மாதத்தில் இருபதங்குல நீளமும் ஏழு இருத்தல் நிறையுமுடையதாயும் வளர்ந்து வெளிப்படுகிறது.

இப்படி வெளிப்போந்த சிசுவின்றேகம் ஒன்றென்றன்றோ கொள்ளப்படுகிறது. ஆனால் முன் சொன்னபடி அணுப்பிரமாண மான அண்டம் பின்னபின்னமாய்ப் பகுக்கப்படும்பொழுது ஒவ்வோர் அணுவும் தேகிவுடையதாய், பிறப்பு வாழ்வு இறப்பென்னும் மூவகை யவஸ்தைகட்கும் உட்பட்டு நம் தேகத்தின் பல பாகங்களின் அம்சங் களாய்ப் பெருகிவளர்ந்து தேகமாகின்றன. கேசமொன்று உதிர்ந்து விடின் வேறுகேசமுண்டாவதும், நகமொன்று விழுந்துவிடின் வேறு நகமுண்டாவதும், தேகத்தில் ரணமொன்றேற்படின் அவ்விரணம் மூடுபட்டு ஊன் வளர்ந்து சொஸ்தப்படுவதும் இம்மூன்றவஸ்தைக ளின் திர்ஷ்டாந்தமாம்.

ஆகவே நந்தேகம் நந்தேகிக்கு இடமாயிருப்பதுமன்றி லட்சோ பிலட்சமான தேகிகட்குமிடமாயிருக்கின்றதாய் நாம் தெரிந்துகொள் ளுகிறோம். தேகத்தகத்தே குடிகொண்ட அணுப் பிரமாணமான தேகங்கட்குரிய தேகிகட்கு இடமாயிருப்பதுமன்றி தேகத்தின் புறத் துள அனேக ஜீவிகட்கும் வாஸஸ்தானமாய் ஏற்பட்டுவிடுகின்றது.

நம் குடலில் வாழும் பெரும்புழுக்களும் கிருமி முதலிய சிறு புழுக்களும் திருசியமானவையே. இவை நம்தேகத்திலே உற்பத்தியா கின்றவையென்று எண்ணுவது தவறு. இவை அணுப் பிரமாணமான அண்டங்களாய் நாமுட்கொள்ளும் போஜன பதார்த்தங்களிலோ ஜலம் முதலிய பானீய பதார்த்தங்களிலோ பெருகிப் பரவியிருக்க நாம் அப்பதார்த்தங்களை அதிருசியமாயிருக்கும் அவ்வண்டங்களுடன் புசித்துவிடுவதால் அவை குடலில் தங்கி நம் தேக போஷணத்திற்க மைந்துள ரச வஸ்துக்களைப் பருகிப் பெருகிவளர்ந்து நம் தேகத் திற்குப் பாதையுண்டுபண்ணுகின்றன. இவைகளிற் பல பெரும் வியா திகட்குக் காரணமாய்த் தேகவலுவைக் குன்றச் செய்து ஆயுளையும் குறைத்து விடுகின்றனவன்றோ.

ஆகாமிய சஞ்சித பிராப்தத்திற்கேற்பப் பல வியாதிகளமைந் துளவெனக் கொள்ளினும் இடைவிடா நிஷ்டையில் ஆனந்தித்திருக் கும் மானுஷசிரோமணிகளான ஜீவன்முக்தர்களுக் கம்மூவகைவாதை களும் அகன்று போவதுபோல் இடைவிடா முயற்சியுடைய புமான் களுக்குச் சுககாயம் பெற்றுத் திடசித்தம்பெற அப்பெரும் வயாதி கட்கு ஏதுவாயிருக்கும் அவ்வணுப் பிராணிகள் தேகத்தைப் பாதிக் காதகற்றக்கூடும்- அதிருசியமாகிய அப் பிராணிகளில் சிலவற்றை முறையே கூறத் தொடங்குவோம்.

(தொடரும்)

செந்தமிழ்.

சமாசாரத் திரட்டு.

திருவிதாங்கூர்.

நெய்யாற்றங்கரையில் ஒரு நாயர் 9 வயதுள்ள தன் மருமகளைக் கொலை செய்துவிட்டதாக ஒரு கேஸ் உண்டாயிருக்கிறது.

திருவனந்தபுரம் ஊளம்பாறை ஆசுபத்திரியிலிருந்து திருடப்பட்ட 500 ரூபாயும் அப்பொழுது டாக்ற்றராகவிருந்த மிஸ்டர் K. கிருஷ்ண பிள்ளை L. M. S. செலுத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள்.

ஹொமியோ டாக்ற்றர் K. M. நாணுபிள்ளையவர்கள் கைதமுக்கில் வருகிற சித்திரை மாத முதல் ஒரு ஹோமியோப்பாதி கம்பௌண்டர் கிளாஸ் தொடங்க எண்ணியிருக்கிறார்கள்.

பருத்திவிளை மிஸ்டர் வீரபத்திர நாடாரவர்களைக் குளச்சல் பட்டண பரிஷ்கார கம்மிட்டியில் ஒரு மெம்பராக நியமனம் செய்திருக்கிறார்கள்.

திருவனந்தபுரம் சென்றல் ஜெயில் கைதிகளுக்குப் பலவிதமான நோய்கள் கொஞ்சக் காலமாக உண்டாகிக்கொண்டிருப்பதின் காரணம அறிந்து விவாரணம் செய்யும்பொருட்டு டர்பார் பிசிஷனுக்கு கவர்ன்மெண்டார் உத்தரவு கொடுத்திருந்தார்கள். அவர் ஜெயிலுக்குச் சென்று அது விஷயமாய் விசாரணைகள் நடத்தி கவர்ன்மென்றுக்கு ரிப்போர்ட்டு அனுப்பினபடி 1. வெளியூர்களிலிருந்து வரும் கைதிகளுக்கு ஜெயிலின் மேற்பக்கமுள்ள குன்றின் மீது ஒரு சிறு சிறைச்சாலை கட்டவேண்டுமென்றும் 2. சுத்தமான தண்ணீர் சப்ளை விஷயமாக சீப் இஞ்சினீயர் விரைவாக ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் 3. ஈ நுழையாத ஒரு அடுக்களையும் கைதிகள் இருந்துண்பதற்குப் பிரத்தியேகமான இடமும் கட்டவேண்டுமென்றும் 4. ஜெயிலின் கீழ் பக்கமுள்ள குளத்தைச் சுத்தப்படுத்தி அதிலுள்ள தண்ணீரை குழாய் வழியாகக் கொண்டுவந்து ஜெயிலினுட்பக்கமுள்ள தொட்டிகளில் நிறைத்து கைதிகளின் ஸ்நானத்துக்கு உபயோகிக்கவேண்டுமென்றும் 5. கக்கூஸ் விஷயமாகவும் பரிஷ்காரம் செய்யவேண்டுமென்றும் 6. ஜெயிலுக்கு வெளியில் 50 கைதிகளுக்கு இருக்கத்தக்க ஒரு புது ஆஸ்பத்திரி கட்டவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

கேரள தீபிகை என்ற ஒரு மலையாளப் பத்திரிகையில் வைக்கத்திலிருந்து ஒரு நிருபர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்— "இவ்விடம் பெருந்திருக்கோவிலப்பன் ஆலயத்தில் பஜனமிருந்த ஒருவர் மாசி 26-உ ஆவேசங்கொண்டு இவ்விடம் மஜிஸ்திரேற்றவர்கள் முன்னிலையில் இரண்டு மண்குடம் நிறைய

யாவரும் காணும்படி இன்னொருவரைக் கொண்டு மணலைப் போடுவித்து ஆலயம் முத்திரையும் வைப்பித்து மூலஸ்தானத்தில் பத்திரமாக வைக்கும்படியும் மறுநாள் உதயனுபுரத்தப்பனுக்கு அபிஷேகம் செய்யவேண்டுமென்றும் சொன்னாராம். அப்படியே உள-வ காலையில் பார்த்தபொழுது குடங்கள் இரண்டில் பால் நிறைந்திருந்ததாகவும அபிஷேகம் செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இது முழுதும் ஏமாற்றமென்று ஒரு நிருபர் இவ்விடம் வெஸ்ற்றேண்ஸ்டார் என்ற ஆங்கிலப்பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

நெடுமெங்காட்டுத் தாலூக்கு வாசிகளான சில காணிக்காரர்கள் சேர்ந்து தங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டுமென்று நமது கவர்ன்மென்றாரிடம் விண்ணப்பஞ் செய்திருக்கிறார்கள்.

திருவிதாங்கூர் ஸ்ரீமூலம்பிரஜா சபையானது சென்ற பெப்ருவரி ௰௬-வ தொடங்கி 26-வ வரைச் செவ்வையாக நடைபெற்றது. சபை முடிவு நாளில் அனேக மெம்பர்கள் திவான்ஜி அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரிகைகள் சமர்ப்பித்தார்கள். இந்த வருஷத்தில் தமிழர்களுக்கெல்லாம் நன்மையான ஒரு விஷயம் நடந்தேறியிருப்பதைப் பற்றி நமக்கு அளவில்லாத ஆநந்தம் உண்டாகிறது. ஸ்ரீமான் T. K. வேலுப்பிள்ளையவர்கள் B.A.B.L. ஸ்ரீமாந் G. ஏசுதாசன் அவர்கள் முதலிய மெம்பர்கள நாஞ்சினாட்டில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டுமென்றும் இப்பொழுது இருக்கிற மலையாளப் பள்ளிக்கூடங்களைத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களாக மாற்றவேண்டுமென்றும் வெகு திறமையாக வாதஞ் செய்தார்கள். அதன்படியே நமது காருணிய திவான்ஜியவர்களும் தமிழர்கள் மீது பிரத்தியேக இரக்கங்கொண்டு இப்பொழுது இருக்கிற மலையாளப் பள்ளிக்கூடங்களைத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களாக மாற்றும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள். இந்த விஷயம் வெகுகாலமாக வாதிக்கப்பட்டிருந்தாலும், மலையாளத்தைத் தாய்ப்பாஷையாகவுடைய ஸ்ரீமாந் T. K. வேலுப்பிள்ளையவர்களால் இப்பொழுது ஒரு முடிவுக்கு வந்தது மிகவும் சிலாக்கியமானதே. ஸ்ரீமாந் T. K. வேலுப்பிள்ளையவர்களுடைய பிதா தாயரகுளம் அளம் குப்பரின்றன்றாக அனேககாலம் நாஞ்சிநாட்டில் வசித்திருந்தார்கள். அந்தக் காலங்களிலெல்லாம் அவர்கள் நாஞ்சினாட்டாரோடு அதிகம் பழகவும் அவர்களோடு உண்மையான அன்பு பாராட்டவும் செய்ததுண்டு. நமது ஸ்ரீமாந் T K. வேலுப்பிள்ளையவர்களுக்கும் நாஞ்சிநாட்டில் அதிகப் பழக்கமும் நாஞ்சிநாட்டாருடைய உண்மையான நிலைமையைப்பற்றிப் பூரணமான அறிவும் உண்டு. அதனாலேயே அவர்கள் இவ்விஷயத்தைப் பற்றி அதிக ஆத்திரத்தோடு வாதித்தார்கள். காருணிய கவர்ன்மென்டார் இப்பொழுது செய்திருக்கிற உபகாரத்தின் பெருமையை நாஞ்சினாட்டார் நன்குணர்ந்து தங்கள் தாய்மொழியான தமிழை இனியேனும் விருப்பத்தோடு கற்க முயல்வார்களென்று நம்புகிறோம்.

1088 ளு நமது சமஸ்தானத்தில் ஆக மொத்தம் வரவு ரூ *1,48,12,000.* செலவு ரூபாய் *1,45,98,000.*

இந்தியா,

மிஸ்டர் P. நாராயண அய்யர் காலஞ்சென்றார்.

மதுரையில் பிரசுரமாகிவரும் பூர்ண சந்திரோதயம் பத்திராதிபரும், பிரதம வக்கீலும், ப்ரம்ஹ ஞான சங்கங்களில் முக்கியமாய் உழைத்து நன்கு விளங்கினவருமாகிய இவர் இறந்ததைக் கேள்வியுற்ற எமக்கு உண்டான துக்கத்தையொருவாறு பொறுத்துக்கொண்டு அவர் உற்றார் பெற்றார் உறவினர் யாவருக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

காப்டன் பட்லரின் கொலை.

வானோ என்னுமிடத்தில் ஜனவரி ௴ 29-உ இரவு நடத்தப்பட்ட ஒரு கூத்தில் காப்டன் பட்லர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கையில் பின்புறத்திலிருந்த ஒருவன் அவரைச் சுட்டுக் கொன்றானாம். காப்டன் உடனே இறந்துவிட்டாராம். கொலைசெய்தவன் தப்பித்துக்கொண்டு ஓடும்சமயம் இரண்டு ஹவில்தாரகள் அவனைப் பின்பற்ற அவர்களின்மீது குற்றவாளி சுடவும் தற்செயலாய் தவறுதலடைந்தது. உடனே கொலை செய்தவன் பிடிபட்டானாம்.

லாகூரில் கொள்ளை.

ஒரு கொள்ளைக்கூட்டம் பிடிபட்டது.

கிஹிரி மஹல்லாவிலுள்ள ஒரு அரிசி வியாபாரி சவித்ரி மகஹமத் இஸ்மெல் என்பவருடைய வீட்டில் கன்னம்வைத்து ஒரு கூட்டத்தார் உட்பிரவேசிக்கவும், வீட்டிலிருந்தவர்கள் விழித்துக்கொண்டு கத்தவும் உடனே சமீபத்திலிருந்த போலீசாரின் உதவியால் கைதுசெய்யப்பட்டார்கள் அக்கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்த ஒருவன் பழைய கைதியாம். இவன் இதற்கு முன் அநேகதடவைகளில் தண்டனையடைந்தவனாம்.

இந்து கான்பரன்ஸ்.

ஜனவரி மாதத்தில் கூடிய ஸநாதநதர்ம ஸபையின் வருஷாந்தக் கூட்டத்தில் அடுத்த மார்ச்சு மாதக் கடைசியில் 1914ம் ௵ கும்ப பண்டிகைக் காலத்தில் ஹரித்துவாரில் ஒரு பெரிய கான்கிரஸ் கூடபபடுமென்று பண்டித திண்டவால் ஷர்மா அவர்களாலும், பண்டித மதனமோஹன மாளவியா அவர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஸநாதந தர்மத்தைப்பற்றி அநேக ஏற்பாடுகள் செய்யப்படுமென்று கருதப்படுகிறது.

ரெயில்வே விபத்து.

பவநகர் ஸ்டேட் ரெயில்வே லயனில் 43-வது மைலில் ஒரு ரெயில்வே பாலம் நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்டதால் திடீரென்று விழவும், உடனே வேறு வண்டித்தொடர் சகாயத்திற்கு வரவும் உயிர்ச்சேதமே கிடையாதாம் பாலத்தைக் கொளுத்தினவன் கைதுசெய்யப்பட்டானாம்.

பயங்கரமான வெள்ளம்.

பஹோவியாவில் ஆபத்தான வெள்ள விபத்து நேர்ந்தது. மோவலாஜ் என்னும் பட்டணம் மறைபட்டது. மற்ற விடங்கள் நாசமாக்கப்பட்டன. அதிக ஜனசேதம். பெருத்த நஷ்டம் விளைவித்தது.

இராஜ தம்பதிகளின் பிரயாணம்.

மகிமை தங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் பாரிஸ் பட்டணத்திற்குச் சென்று அவ்விடத்திலுள்ள பிரிடிவ்ஷ எம்பஸி என்னும் ஆங்கில ஸ்தானாபதியிடத்தில் ஐந்து நாள் இருப்பார்களென்று தெரிகிறது.

ஒரு இந்து கைம்பெண் துருக்கர்களால் தூக்கிக்கொண்டு போகப்பட்டாள்.

போச்ரா போலீஸ்ஸ்டேஷனைச் சேர்ந்த பிஸ்வ காத்பூர் என்னுமூரில் தன் பந்துவின் வீட்டிக்குப் போயிருந்த சந்தியா என்னும் பெண்ணை 8 துருக்கர்கள் சென்ற ஜனவரி மீ 22-ம வ தூக்கிக்கொண்டுபோய் பராமல்லா என்பவரின் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அப்பெண் கூக்குரலிட்டதைக் கேட்டு அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் ஓடிவந்து அவளை விட்டுவிடும்படி கேட்க அவர்களைத் துருக்கர்கள் பயமுறுத்தித் துரத்திவிட்டார்கள். அப்பெண் நன்றாய் உதைக்கப்பட்டாள். பிறகு அவர்கள் அவளைப் பாஜமல்லா பெண்ஜாதியிடம பத்திரமாய்ப் பாதுகாக்கும்படி சொல்லிவிட்டு வேறிடஞ் செல்லவும் அவள் அப்பெண்ணின் நிலைமையைக் கண்டு தப்பித்துக் கொள்ளும்படி விட்டுவிட்டாள். குற்றவாளிகளின்பேரில் வாரண்டு கிளம்பியிருக்கிறது என்று ஒரு நிருபர் அமிர்தபஜார் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்.

வரதக்ஷணையின் கெடுதல்கள்.

சென்ற மீ 30-ம் வ கல்கத்தா ராஜா ராஜபுலுப்பு தெருவில் 43-ம் நெ. வீட்டில் வசித்த தாகர்ஹரேந்திர சந்திர முக்கர்ஜி என்பவரும், அவர் பெண்ஜாதி கிரிபாலா என்பவளும் கீழே நித்திரை செய்துகொண்டிருக்கவும், ஸூசலாதா தேவி என்னும் பதினைந்து வயதுள்ள அவர்களின் பெண் அன்று மாடியின்மேல் நித்திரை செய்யச் சென்றாள். இரவு இரண்டுமணி சுமாருக்கு அடுத்தவீட்டிலுள்ளவரும், இன்னுஞ் சிலரும் ஓடிவந்து உன் மகள் நெருப்பில் அகப்பட்டு வேக நீங்கள் தூங்குகிறீர்களே என்று கதவை யிடிக்கவும், வந்தவர்களும பெற்றோரும் மாடியிற் சென்று பார்க்க ஸூசலாதா தேவி நிர்வாணமாய் துணிகளெல்லாம் எரிந்து உடம்பு முழுவதும் வெந்துகிடக்கக் கண்டனர். பக்கத்தில் ஒரு கிருஸனுயில் எண்ணெய்ப் புட்டியும், ஒரு வத்திப்பெட்டியும் கிடந்தது. உடனே அவளை ஸ்மரணையற்ற நிலைமையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். அங்கே அவள் இறந்துவிட்டாள். ஏனெனில் அவள் ரொம்பவும் வெந்து சயமடைந்துவிட்டாள். இவள் தன்னை எரித்துக்கொண்டதற்குக் காரணம் இவளின் கலியாணமே? இப்பெண்ணை ஒரு பி. எல். மாணவனுக்குக்

கலியாணஞ் செய்துகொடுப்பதாயும், அக்கலியாணம் அடுத்த மல்குண பாதத்திலென்றும், அதற்கு வரதக்ஷிணை 800 ரூபாயும் 1200 ரூபாய் நகைகளும் போடவேண்டுமென்றும், அதற்காக பரீத்பூர் ஜில்லாவிலுள்ள காக்டி கிராமத்திலுள்ள அவர்களின் வீட்டை அடகுவைத்து 1000 ரூபாய் வாங்கியாகவேண்டுமென்றும், அவள் சிறிய தகப்பனர் எழுதியிருந்ததைக் கேட்ட ஸ்நேசலாதா தேவி தன் கலியாண நிமித்தமாக வீட்டை அடமானம் வைக்கக்கூடாதென்று தன் தாயிடம் வற்புறுத்திக் கூறினளாம். அதே கவலையால் அவள் தன்னைத் தீய்க்கு இரையாக்கிக்கொண்டாள். கையிலுள்ளவற்றையெல்லாம வரதக்ஷிணைக்குக்கொடுத்து ஏழைகளாகி வருத்தப்படும் போதும் பெற்றோரின் கதியை நினைத்து தன்னுயிரை மாய்த்துக்கொண்ட இப்பெண்ணின் வீரச்செய்கையை போல் இதுவரையிலும் ஒருவரும் செய்யத் துணியவில்லை. வரதக்ஷிணை வாங்குவது எவ்வளவு ஈனச் செய்கையென்பதும், அதனல் உலகமுழுமைக்கும் இந்துக்களிடம் அவமதிப்புகொள்ள இடந்தருகிறது. ஆகையால் இவ்வித வழக்கங்களை எப்போது நமது ஜனங்கள் விலக்குவார்களோ அதுவரையில் அபகீர்த்தி இருக்கத்தான் செய்யும்.

தமிழன் பத்திரிகையும் அதன் அதிபரும்.

திருவனந்தபுரத்தில் நடக்கும் தமிழன் என்னும் பெயர் பூண்ட செந்தமிழ்ச் சஞ்சிகை யெமக்கு வரப்பெற்று முற்றுங் கண் குளிரக்கண்டுவகைகூர்ந்தோம். இதன் பத்திராதிபராகும் பண்டிதர் எஸ். முத்துஸ்வாமிப்பிள்ளை அவர்கள் பிரதமத்தில் 83-ம் ஆண்டில் இத் தமிழனை யாரம்பித்து மெலிந்து நின்றதும், பின்னர் அமிர்தவசனியென்ற பத்திரிகைக்கதிபரானதும் பிறகு அதைவிட்டு விலகியதும் மீண்டும் பத்திரிகை நடத்த வெண்ணங்கொண்டு பொருட் பலமின்றி வருந்துங்கால் கானடுகாத்தான் ஸ்ரீமாந் S. R. M. M. Ct. பெத்தாச்சி செட்டியார் அவர்களை முனபின் தெரியாது பத்திரிகை துயராவில் அவர்களின் உதாரகுணத்தைத் தெரிந்து தமது அபிப்பிராயத்தைத் தீம்பொருட்பயக்குஞ் செய்யுட்பூர்வமாக விண்ணப்பித்ததும் அதற்கு ச செட்டியாரவர்கள் பிரபுத்தன்மை விளங்க கெம்பீரத்தில் பொருளளித்துதவியதும் மற்றும் பெருந்தகையாளர்கள் இயன்றவாறளித்ததும் இன்னும் பொது ஜனனுகூலநிமித்தம் தாமபட்டுள்ள சிரத்தையின் சரிதத்தையுந் திரட்டி யொருபால பொறித்துள்ளதைக்கவனிக்க மிகவும் பரிதாபத்தைத் தரத்தக்கதாயிருக்கின்றது. ஊக்கமது கைவிடேல், என்ற நம் முதுமைப்பிராட்டியார் மந்திரமொழிக்கு இப்பத்திராதிபரேயிலக்காயிருக்கின்றனர். இங்ஙனம் பொது நலத்திற்கு உழைக்கும் பூமான்கள், மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார், என்றவான்றோர் கூற்றின்படி இப்பத்திராதிபரவர்கள் தன்னலங்கருதாது இரண்டாமுறை இந்தமிழன் தமிழுலகெங்குஞ் சஞ்சரிக்க வேண்டுமென்றெடுத்துக் கொண்டகஷ்டமோ மிகப்பெரிதாம். இவருக்கிருக்கும் பொதுநோக்கமும் தேசோபகாரசிந்தையும் ஆழ்ந்த கல்வியறிவின் விசாலமும் புகழத்தக்கதேயாம். இன்னன மேதாவிகளால் சிரமம் பாராட்டாதெழுதப்பெறுந் தமிழ்ப்பத்திரிகைகளைத் தமிழ்நதேச சகோதரர்கள் வாங்கி வாசிப்பதே தகுதியாம். இத்தமிழன் சந்தா போஷகர்கட்கு ரூ. 4. 0. 0. சந்தா

தார்க்கு 2. 0. 0-மாக வாங்குவோர்க்கு லாபமாகவே இருக்கின்றது. இத் தமிழன் சஞ்சிகையைச் சகோதரவாஞ்சையைப் பாராட்டியனுப்பிய பத்திராதிபராகும் பிள்ளையவர்கட்கெமதுவந்தனமளிப்பதுடன் இத்தமிழன் நீண்டகாலமும் இலவுலகிலுலாவக் கடவுள் நல்லருள் புரியவேண்டுகின்றோம்.

"சுகாபிவிருத்தினி"

இந்தியாவில் 15000 வகையாய புஷ்பச் செடிகளிருக்கின்றனவாம்.

வங்காளமாகாணத்தில் 900 மைல் நீளமுடைய ஒரு கால்வாயிருக்கின்றது. இதுவேஉலகத்திலுள்ளகால்வாய்களில்மிகநீளமானதாம்.

இவ்வருஷம் காங்கிரஸ் மகாசபை சென்னை மாகாணத்தில் கூடுவதால், வழக்கமாய்க் கூடுகிற சென்னை மாகாணக் கான்பரன்ஸ் இவ்வருஷம் கிடையாதாம்.

வங்காள மாகாணத்தில் மானஷா என்னுமொரு மாதாந்தப்பத்திரிகை 5-வருஷகாலமாக வங்காளபாஷையில் நடைபெற்று வருகின்றது. நாட்டோர் மகாராஜா அவர்கள் அப்பத்திரிகைக்கு ஆசிரியாகவிருந்து அதனை நடத்திவருகின்றனர்.

"மாமி மெச்சிய மருமகளில்லை, மருமகள் மெச்சிய மாமியில்லை" என்பது பழமொழியாக, உலக அநுபவமும் அதற்கு முற்றிலும் ஒத்தே காணப்படுகின்றது. வெகு நாளைக்கு முன்பு இயற்றிய "மங்களவல்லி விலாஸ்" மும், "பிரதாப முதலியார் சரித்திர" த்தில் மாமி கொடுமையைப் பற்றிய அத்தியாயமும் இவ்விரண்டிலும் அடங்கியுள்ள விஷயங்கள் இன்று கூடபிரத்தியக்ஷத்தில் நிகழ்வதுபோன்றுள்ளன. இப்போதும் திருச்செங்கோட்டில் அக்கிரகாரத்தில் ஒரு பார்ப்பன மாது தன் மருமகள், பாலைக் கைதவற விட்டு ஊற்றிவிட்ட பெரும் குற்றத்திற்காக, மருமகளுடைய கன்னத்தை சுட்டுப் பொசுக்கிவிட்டாள், இந்த விஷயம் கோர்ட்டேறினால் மாமிக்குக் காவல் தண்டனை 3-மாதத்துக்குக் குறையாமல் கிடைப்பது நிச்சயம். இன்னும் இத்தகைய மாமிகளின் கொட்டம் அடங்காதது பெரும் வியப்பே.—தி—னி.

இங்கிலாந்தில் பள்ளிக்கூட மாணவர்களைக் கூட்டங்களாகச் சேர்த்து முறைப்படி துப்பறியும் தொழிலைச் சிலகாலமாக கற்பித்து வருகின்றனர். அதுபோல் இந்து மாணவர்களையும் பயிற்றுவித்தால் ராஜத்வேஷ எண்ணங்கள் அவர்களிடமில்லாமற் போய்விடுமென்று விபின் சந்திரபாலர் இந்துரெவியூ என்னும் பத்திரிகையில் எழுதியிருக்கின்றார்.

மாணவர்களுக்கு

போட்டி உபந்யாசங்கள்.

1.	அச்சுயந்திரத்தின் உற்பத்தியும் அதன் வளர்ச்சியும்.	மாசி
2.	இப்பொழுது ஜீவித்திருக்கும் ஏதேனுமொரு தென்னிந்திய சிரேஷ்டரின் ஜீவித சரித்திரச்சுருக்கம்	பங்குனி.
3.	தென்னிந்தியாவிலுள்ள ஏதேனுமொரு பட்டணத்தின் சரித்திரம்	சித்திரை

(a) இவ்வியாசங்கள் அந்தந்த மாதம் 30-உ க்கு நமக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

(b) காகிதத்தின் ஒரு பக்கம் தெளிவாயெழுதப்பட்டிருக்க வேண்டும். புல்ஸ்கேப் 12 பக்கங்களுக்கு மேற்படக் கூடாது.

(c) ஒவ்வொரு உபந்யாசத்தோடும் 4 அணு தபால் ஸ்டாம்பும் அந்தந்த ஸ்கூல் தமிழ்ப் பண்டிதரிடமிருந்து ஒரு நற்சாட்சிப் பத்திரிகையும் அனுப்பவேண்டும்.

(d) பரிசுபெறும் வியாசத்தைப் பற்றிய சகல உரிமைகளும் நமக்கேயாகும்.

(e) ஜெயம்பெறும் மாணவருக்கு 1 ரூபாய் முதல் 2 ரூபாய் வரை விலையுள்ள தமிழ்ப்புத்தகங்கள் பரிசளிக்கப்படும்.

S. முத்துசுவாமிப்பிள்ளை,

"தமிழன்" பத்திராதிபர்,

திருவனந்தபுரம்

இனாம் இனாம் இனாம்

180 பக்கப் புத்தகம் இனாம்.

இப்புத்தகம் ஒருவர் தாம் அறியவேண்டிய ஆரோக்கிய சம்பந்தமான ஜீவாதாரங்களைத் தெரிவிக்கிறது. வாலிபர்களுக்கும் இல்லறத்திருப்போருக்கும் உபயோகமுள்ளது. விலாசத்தைத் தெரிவிப்போர்களுக்கு இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்.

22, பிராட்வே, மதராஸ்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தி இல்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பர கியாட்லாக்கு இனாமாக அனுப்பப் படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108உள்ளமாலை1க்கு 6 அணாமுதல் ரூ 12 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள்சிறிதாகவிருக்கும் 6 முகக்கண்டிகள் 33 உள்ள கண்டி 1-க்கு ரூ 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு அ 10 முதல் ரூபா 10 வரை விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

பனி! பனி!! பனி!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைசும், நேர்த்தியுமான கம்பளி போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழம் அகலம், சிகப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராகவிருக்கின்றன, உருப்படி 1-க்கு ரூபா 5 8 0, ஷை சிறியது 1-க்கு 4 8 0 மேகவர்ண போர்வை 1-க்கு6 8 0 தபால் செலவு பிரத்தியேகம்.

காசி வைரவர் கயிறு.

க-வது நெம்பர்	௱-க்கு	3 0 0
உ-வது ,,	,,	2 8 0
௩-வது ,,	,,	2 0 0
௪-வது ,,	,,	0 6 0

வெண்பட்டுவேஷ்டிகள்

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் வேஷ்டிகள்மாதிரி சன்னக்கம்பி, ருத்திராக்ஷக்கம்பி, ஜரிகைக் கம்பிபோட்டவை.

முழம்	அகல	ரூ	முதல்	வரை
4	2	$4\frac{1}{2}$	,,	7
6	$2\frac{1}{2}$	7	,,	9
6	3	10	,,	12
7	$2\frac{1}{2}$	8	,,	12
7	3	10	,,	14
8	3	12	,,	15
9	3	14	,,	20
10	3	15	,,	22

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளைவெண்கலத்தாற் செய்தசெம்பு, குடம், கரண்டிமுதல் 32 சாமான்களடங்கிய அழகும், நேர்த்தியும், நைசும், பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு ரூபா 2

பெரியசெட்டு 1க்கு ரூபா 4

நல்ல பெருங்காயம் தோலா 10க்கு ரூ 1 0 0 உடனே எழுதுங்கள்.

விலாசம்

மானேஜர்

பட்டுபீதாம்பர கம்பெனி,

தாராநகர் தெரு—காசி.

Silk Pitaber Co., Benares City.